# புனை பெயரும் முதல் கதையும்

மீனாட்சி
புத்தக

# பூனைபெயரும் முதல் கதையும்

தொகுத்தவர்:
பூவை எஸ். ஆறுமுகம்

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1.

# புனைபெயரும் முதல் கதையும்

தொகுத்தவர்:

பூவை எஸ். ஆறுமுகம்

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1

முதற் பதிப்பு: பிப்பிரவரி – 1967
மீனாட்சி: 73
உரிமை பதிவு

விலை ரூ. 1-75

*MEENAKSHI PUTHAKA NILAYAM*
*60, West Tower Street,* ***Madurai-1***

அச்சிட்டோர்:
ஈஸ்வரி பிரிண்டர்ஸ் சென்னை-14.

# முன்னுரை

நினைத்து நினைத்து நெஞ்சம் மகிழத்தக்கதோர் ஆனந்தம் மிகுந்த பொன்னான வாய்ப்பினை எனக்கு அருளிய "உமா"வின் தண்ணளியை நான் போற்றித் துதிக்காத நாளே கிடையாது. அத்தகைய பேறு கிடைத்ததன் மூலமாகவே, எனக்குப் புதிய புதிய சோதனைகள் செய்து பார்க்க ஒரு வாய்ப்பும், அவ்வாய்ப்பைப் போற்றி மகிழ்ந்த இலக்கியப் பெருமக்களின் உற்சாகத் தூண்டுதல்களைப் பெற ஒரு வேளையும் எனக்குக் கிட்டின.

'உமா' இதழின் பொறுப்புள்ள—பொறுப்புமிக்க ஆசிரியராக நான் பணி இயற்றத் தொடங்கிய நாள் தொட்டு, என்னுடைய இலக்கிய மனம் புதிய புதிய துறைகளில் சஞ்சரித்தது. அதன் விளைவாகவே, புதிய புதிய பகுதிகளை அறிமுகப் படுத்தினேன். பூரணமாக சுதந்திரம் தந்த 'உமா' அதிபர் திரு ஜி. உமாபதி அவர்களின் அன்புதான் இதற்குக் காரணம்!

'உமா'வில் அவ்வப்போது நான் ஆரம்பித்து நடத்திய நூதனப் பகுதிகளின் சேர்க்கைதான் இத்தொகுப்பு. இம் மாதிரித் தொகுப்பை நானே சொந்தத்தில் வெளியிட இருந்தேன். உரிமையாளர் அவர்களும் இசைவு தந்திருந்தார்கள். இப்போது அம்முயற்சிக்கு வேறொரு முத்திரை கிடைத்திருக்கிறது. எனக்கு அலுவல் மிச்சம். இல்லையா?

'புனைபெயரும் முதல் கதையும்' என்ற பொதுத் தலைப்பில் வெளியாகியுள்ள இந்நூல் இலக்கிய ஆர்வலர்களுக்கு ஒரு நல்ல விருந்து படைக்கக் கூடியது. எழுத்தாளர்கள் பலரை அறையிலிருந்து அம்பலத்துக்குக் கொண்டு வந்து விட்டேன். புனை பெயர் வரலாறு, முதற் கதை பிறந்த கதை—ஆகிய இரண்டு பிரிவுகளிலும் எத்தனை எத்தனையோ சுவைச் செய்திகள் வெளியாகியிருக்கின்றனவே!

தமிழ் இலக்கியத்தில் தமக்கென உரிய உயரிய இடங்களை நிச்சயப்படுத்திக் கொண்டுள்ள ஆசிரியர்கள் பலரும், அந் நிலையை அடையத் தன்னம்பிக்கையுடன் வளர்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் சிலரும் இந்த அரங்கத்தில் ஒன்று கூடியிருக்கிறார்கள். எல்லோரையும் ஒரே மேடையில் கொணர்ந்து நிறுத்திய 'புண்ணியம்' என்னுடையது. அப் புண்ணியத்தில் என் பணி அடங்கட்டும்!

ஆனால், ஒன்று:

எனக்குக் கும்பல், கூட்டம் என்றால் எப்போதும் பிடிப்பதில்லை. இது என்னவோ விலக்கு. சுய விளம்பரங்களைப் பொறுத்தமட்டில் 'உமா' அளவில் நான் 'ஒதுங்கியே' இருந்தேன். இக்கொள்கையையே நான் எனது குறிக்கோளாகக் கொண்டிருந்தேன். இதுவே நான் விரும்பியது. அதுவே எனக்கு ஆறுதல் நல்கியது. எனது விஷயங்கள் 'அமுத சுரபி' போன்ற பிற ஏடுகளில் வெளியானவை.

இந்த அரங்கத்தில் பங்கு பற்றி, இவ்வரங்கத்தை நிறக்கச் செய்வதில் மகிழ்வும் ஆர்வமும் காண்பித்த இதயங்களுக்கு என் நன்றி கிட்டும்.

நீங்கள் சந்திக்க வேண்டிய தகுதியாளர்கள் இன்னும் நிரம்பப் பேர்கள் இருக்கிறார்கள் அல்லவா?—உண்மைதான்—அவர்களை அடுத்த அரங்கம் உங்கட்குக் காட்டும்!

தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு வரலாற்றுக்கு இத்தொகுப்பு அதற்குரிய மதிப்புடன் இடம் கொடுக்கும். இந்த இலக்குத்தான் என்னுடைய இப்பணிக்கு மூலம்.

இம்மதிப்பினை உணர்ந்து, இதை நூல் வடிவத்தில் வெளியிட ஆர்வம் கொண்ட மீனாட்சி புத்தக நிலையத்தாருக்கு என் வணக்கம் சொந்தம்.

பூவை மாநகர்
2, அக்டோபர் 1966

பூவை எஸ். ஆறுமுகம்

# ஏன் இந்தப் புனைபெயர் ?

# 1

**ஜெகசிற்பியன்**

புனை பெயரில் அதிக நம்பிக்கை கொள்ளாத நண்பர் பூவை எஸ். ஆறுமுகம், புனை பெயர் என்ற ஆமை ஓட்டுக்குள் புகுந்து முடங்கி இலக்கிய உலகில் ஏதோ ஒரு தினுசாக நகர்ந்து கொண்டு கிடக்கும் என்னைப் போன்ற அப்பாவிகளை இப்படிச் சந்தி சிரிக்க வைக்க நினைத்தது ஏன் என்று எனக்குப் புரியவில்லை! காரணம் எதுவாயிருந்தாலும், அந்த 'ஆமை ஓட்டுக்குள்' நான் புகுந்து ஆண்டுகள் பதினாறு ஆகிவிட்டதால், என் 'தலையை' சற்றே நீட்டிக் காட்ட இப்போது தைரியம் பிறந்திருக்கிறது.

என்னைப் படைக்கக் கடவுள் எவ்வளவு காலம் யோசனை செய்தாரோ எனக்குத் தெரியாது; என்னை உருவாக்க என் பெற்றோர் எத்தனை இரவுகள் மந்திராலோசனை செய்தார்களோ அதுவும் தெரியாது; நான் பிறந்த எட்டாம் நாள், மாயவரம் சுந்தரம் டாக்கீஸ் அருகாமையிலுள்ள நெடிதுயர்ந்த மாதா கோயிலுக்கு என்னைத் தூக்கிக் கொண்டு போய் ஞானஸ்நானத் தொட்டிலில் கிடத்தும்போது பாதிரியாரிடம் எனக்கு என்ன பெயர் சூட்டியிருப்பதாகச் சொல்லலாம் என்று எனது பெற்றோரும் உறவினர்களும்

எவ்வளவு நேரம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டார்களோ—அதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஆனால்—

இதயத்தின் கனவுகளை ஏட்டிலே புதைக்க வேண்டுமென்ற எண்ணம் மொட்டுவிட்ட அந்த 1939-ம் ஆண்டு முதல், சுமார் மூன்றாண்டு காலம்வரை எனக்கு ஒரு புனை பெயர் வேண்டுமென்று நான் யோசித்த யோசனை இருக்கிறதே—அப்பப்பா! அதை நினைத்தாலும் இப்போது வயிற்றை முறுக்கிக்கொண்டு சிரிப்பு வருகிறது. அதையெல்லாம் சாங்கோ பாங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை; அதற்கு இங்கு 'இடமும்' இல்லை.

1939-ஆம் வருஷம் ஜூன் மாதம் 'நல்லாயன்' என்னும் பத்திரிகையில் 'சுந்தரனின் சோபனம்' என்ற எனது முதல் கதை வெளியானபோது, அதில் 'தஞ்சை ஜெர்வாஸ்' என்பதாக வெளிச்சம் போட்டுக் கொண்டேன். (தஞ்சாவூரில் அப்போது நான் படித்துக் கொண்டிருந்ததால், என் இயற்பெயரின் முன்னால் 'தஞ்சை' என்ற வார்த்தை ஒட்டிக் கொண்டுவிட்டது!) பிறகு எனது சொந்த ஊரான மாயவரம் வந்தபின், புதுவை 'சர்வ வியாபி'யிலும், மதுரை 'சத்திய தூதனி'லும், 'மாயவரம் ஜெர்வாஸ்' என்ற பெயரில் 'போர'டித்துக் கொண்டிருந்தேன். பிறகு சென்னைக்கு வந்து, சென்னை சித்திர கலாசாலையில் சேர்ந்து ஓவியம் பயில ஆரம்பித்தேன். அப்போதும் 'கதைகள்' எழுதிக் கொண்டுதான் இருந்தேன்; ஆனால், என் பெயருக்கு முன்னால் 'சென்னை' என்று சேர்த்துக் கொள்ளவில்லை. வெறும் 'ஜெர்வாஸ்' என்றே எழுதினேன்.

இப்படியாகத்தானே எனது 'எழுத்து வெறி' வளர்ந்து கொண்டிருந்தபோது, அது நசுங்கும்படியான ஒரு சூழ்நிலை உருவாகியது. அது என்ன தெரியுமா? மாளாத மன வேதனையுடன் அதைச் சொல்கிறேன்—'ஜெர்வாஸ்' என்ற

எனது கிறிஸ்தவப் பெயர்தான் அந்தச் 'சூழ்நிலை'யை உண்டாக்கியது. ஹிந்துக்களின் பத்திரிகைகளில் எழுதுகிறேன் என்று எனது மதத்தார்கள் என்மேல் சீறினார்கள். கிறிஸ்துவனுக்கு நம் பத்திரிகையில் இடம் கொடுப்பதாவது என்று சில 'ஹிந்துப் பத்திரிகை ஆசிரியர்கள்' மனம் சுளித்தார்கள்! இதனால், என் எழுத்தார்வம் மரண வேதனைப் பட ஆரம்பித்தது.

இந்த வேதனை உச்சகட்டத்தை அடைந்தபோதுதான் எனக்கொரு ஞானோதயம் பிறந்தது: 'நான் ஏன் ஒரு புனைபெயர் வைத்துக்கொள்ளக் கூடாது?'

என் பெற்றோர் என்னை 'பாலையா' என்று செல்லமாக அழைப்பது வழக்கம். அந்தப் பெயரையே என் 'புனைபெயராக' வைத்துக்கொண்டு மீண்டும் எழுத ஆரம்பித்தேன். ஆனால் அந்தப் பெயரில் உப்புச் சப்பில்லை என்ற குறை இருந்தது. எனவே, வேறொரு புனைபெயரைத் தேட ஆரம்பித்தேன்.

நான் ஓவியக் கலை பயின்று கொண்டிருந்தபோது என்னுடன் மணியம் என்பவரும் (இப்போது 'கல்கி' பத்திரிகையில் பிரபல சித்திரக்காரராய் இருப்பவர்) பயின்று கொண்டிருந்தார். அவர், அமரர் கல்கி எழுதி வந்த 'பார்த்திபன் கனவு', 'மகுடபதி' என்ற தொடர் கதைகளின் தலைப்புச் சித்திரங்களை வகுப்பறையில் இருந்து கொண்டே எழுதுவார். அதை நான் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பேன். சித்திர ரசனைக்காகவா? இல்லை—அந்தக் கதைக் கதைகளை எழுதும் 'கல்கி' என்ற புனைபெயரைத் திருப்பித் திருப்பிப் படிக்கத்தான்! அந்த மூன்றெழுத்துப் பெயர் என்னை அத்தனை தூரம் கவர்ந்து விட்டது. வைத்தால் இப்படி ஓர் அழகான புனைபெயரை வைத்துக்கொள்ள வேண்டும்; இல்லையென்றால் எழுதுவதையே மறந்துவிட வேண்டும்!...

எனக்கு அடிநாள் முதலே, ஆங்கிலக் கவியரசன் ஷேக்ஸ்பியரின் நூல்களைப் படிப்பதில் அபார மோகம். அவனது தலைசிறந்த 'துன்பியல்' நாடகங்களைத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டிருப்பேன். இயற்கையிலேயே நான் அவலச் சுவைப் பிரியன்! அதற்கு, நான் பிறந்து வளர்ந்து வாழும் சூழ்நிலையும் அனுபவமும் காரணங்களா யிருக்கலாம். எனவே, அவலச் சுவை மன்னனான ஷேக்ஸ் பியரை நான் அடியோடு காதலித்தேன்!...

இந்தச் சமயத்தில், திரு. சுத்தானந்த பாரதியாரின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு நூல்கள் சிலவற்றைப் படிக் கும் வாய்ப்பு கிடைத்தது. அப்படிப் படித்த ஏதோ ஒரு நூலில் முன்னுரையில் (விக்தர் ஹியூகோவின், 'இளிச்ச வாயன்' அல்லது 'ஏழைபடும் பாடு' என்று நினைக்கிறேன்) ஷேக்ஸ்பியர்' என்ற பெயருக்கு 'செகப்பிரியர்' என்று தமி ழுருவம் கொடுத்திருந்தார். (கான்டர்பரி என்ற ஊரின் பெயரை திரு. யோகியாரவர்கள் 'கந்தர்புரி' என்றுதான் எழுதுவது வழக்கம்!) இந்தப் பெயர் மொழிபெயர்ப்பு என்னை வெகுவாக ஆகர்ஷித்துவிட்டது. என்னைக் கவர்ந்த உலகப்பெருங்கவிஞன் ஷேக்ஸ்பியர், தமிழில்'செகப்பிரியர்' ஆனதை எண்ணி யெண்ணி வியந்தேன். இந்த வியப்பு தான் எனக்கு ஓர் அழகான புனைபெயரைத் தேடித் தந் தது. அதுதான் 'ஜெகசிற்பியன்' என்ற பெயர்! இந்தப் பெயரில் ஷேக்ஸ்பியர் என்ற பெயரின் ஒலி மணமும் ஏதோ ஒரு தினுசாக ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று எனக்கு எல்லையற்ற திருப்தி. அந்தத் திருப்தி இன்றும் அழியாமல் இருந்து வருகிறது. இந்தத் திருப்திக்கு இன் னொரு முக்கிய காரணமும் உண்டு. எனது புனைபெயர் எந்த ஒரு மதத்தின் சார்புள்ளதாகவும் இருக்கக் கூடாது என்று விரும்பினேன்—நான் கடவுள் நம்பிக்கையுள்ளவனே தவிர, மத நம்பிக்கை அற்றவன் என்பதால்! (மத நம்பிக்கை யால்தானே கடவுள் நம்பிக்கை பிறக்கிறது என்று சிலர் கேட்கலாம். அப்படி அல்ல என்று என்னால் வாதிக்க முடி

யும்.) 1942-ஆம் வருஷம் 'ஜெகசிற்பியன்' என்ற இந்தப் புனைபெயரில் முதன் முதலாக 'நவயுவன்' பத்திரிகையில் எழுதினேன். அன்று முதல் இன்றுவரை அதே பெயரில் எழுதி வருகிறேன்.

இந்த உலகத்தில் நான் என் உயிரைவிட மேலாக நேசிப்பது இரண்டு. ஒன்று, எனது அருமைப் பிள்ளைகள். மற்றொன்று, எனது அழகான புனைபெயர்.

# 2

'சுஜி'

என் புனை பெயர் தெரியும். ஏன் என்று தெரிய வேண்டும். இன்று, தமிழ் நூல்கள் பள்ளிப் படிப்புக்கும் அப்பால் ஏராளமாகக் கிடைக்கின்றன. நான் படித்த காலத்தில்—கால் நூற்றாண்டுக்கு முன்—ஒரு சில தமிழ் நாவல்களே உரை நடைச் செல்வமாய் இருந்தன. தமிழைப் படித்துப் பட்டம் பெற்ற வித்வான்கள், பண்டிதர்கள் மட்டுமே எழுதலாம், மற்றவர்கள் எழுதக் கூடாது என்று எண்ணி வந்தேன். பள்ளிப் படிப்பின் பயன் இது. பின்னர் 'விகடன்' படித்தேன். என்னைக் கவர்ந்தது. 'கல்கி'யைக் கண்டேன். கண்டறியாதனவெல்லாம் கண்டேன். வாரா வாரம் படிக்காமல் தீராத பகுதியாகி விட்டது.

பள்ளிக்கூடத்திற்கும் அப்பால் இலக்கியம்—உரை நடைச் செல்வம் உண்டென்றும், கதை எழுதிவரும் ஆசிரியர்கள் பட்டம் பெற்றிருக்க வேண்டியதில்லை யென்றும் அறிந்தேன். இந்த எழுத்தாளர்களுக்குள் சகல துறையிலும் என்னைக் கவர்ந்தவர் 'கல்கி'. பல்லாயிரம் வாசகர்களுக்குள் நானும் ஒருவனாக இருந்தவன். சிறந்த வாசகன் எழுத்தாளன் ஆக முடியும் என்ற நம்பிக்கை 'ஏழைகளின் தோணி' என்ற கதையாக உருப் பெற்றது. என் முதல் சிருஷ்டியைத் தாங்கும் பெயர் என்ன? என். சுப்பிரமணியம் என்று எழுதினேன். தமிழ் நாட்டில் வீட்டிற்கு மூன்று

பெயர் சுப்பிரமணியங்கள்! தனித்து நிற்க வழி என்ன? வழி என்ன? புனை பெயர் ஒன்றே, தமிழ் நாட்டில் சுப்பிர மணியர்கள் பல்லாயிரம் இருந்தாலும், தனித்துச் சொல் லும்.

இரண்டு மூன்று நாள் வாதனை; திடீரென்று மனசிலே பளிச்சிட்டது. யார் என்னை எழுதும்படி ஆட்டுவிக்கிறார்? எனக்கும் அப்பால் ஒரு சக்தி என்னிடம் குடி கொள்ளும் படி செய்திருக்கிறதே? அந்த மனோரஞ்சித மலர் தந்த தெம்பும், ஊக்கமும் அல்லவா நான் எழுதும்படி ஆயிற்று! என் பெயரோடு, அந்தப் பெயரை—தமிழ்ப் பூங்காவின் மனோரஞ்சித மலரின் முதலெழுத்தை ஒட்டுக் கட்டிக் கொண்டேன். அமரர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய 'கல்கி'யிலுள்ள 'கி', என்னுடைய புனைபெயரில் பாதி. மல ரோடு சேர்ந்த நார் என்றும், உயிரோடு சேர்ந்த உடலென் றும், சக்தியோடு சேர்ந்த சிவம் என்றும் என் புனைபெயரை நீங்களே சொன்னால், அது மிகையல்ல. 'விகடன்', 'கல்கி' இரு பத்திரிகை வழியாகத் தமிழ் அன்பு நிறைந்த இளம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் கி. பேனா மன்னரைக் காதலித்த உள்ளங்களில் என் உள்ளமும் ஒன்று. இதற்கு என் புனைபெயர் சான்று.

# 3

வல்லிக்கண்ணன்

தமிழ் எழுத்தாளர் முதலாவது மகாநாடு கோவையில் கூடியிருந்தது. 1944-ம் வருஷம் என்று நினைக்கிறேன். வெற்றிகரமாக நிகழ்ந்த அம் மகாநாடு எழுத்தாளர்கள் அனைவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்க முயன்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் நானும் 'சுய விளம்பரம்' செய்ய முன் வந்தேன்.

"நான்தான் வல்லிக்கண்ணன். நான்தான் நையாண்டி பாரதி. நான்தான் கோரநாதன். நான்தான் பிள்ளையார். நான்தான் சொக்கலிங்கம். நான்தான் மிவாஸ்கி. நான்தான் கெண்டையன் பிள்ளை. நான்தான் சோம்பேறி. நான்தான் சொனு முனு. நான்தான் கனவானந்தா. நான்தான் இளவல்" என்று அடுக்கிக் கொண்டு போனேன். எல்லோரும் பிரமித்து விட்டார்கள் என்று நான் சொன்னால் அது 'அளப்பு' ஆகாது!

'என் பெயர் ரா. சு. கிருஷ்ணஸ்வாமி' என்று நான் அப்பொழுது சொன்னேனோ, இல்லையோ!—இன்று எனக்கு நினைவு இல்லை.

இப்பொழுது 'ஏன் இந்தப் புனை பெயர்?' என்று விளக்கம் தருமாறு கேட்கிறார் நண்பர் பூவை ஆறுமுகம். எந்தப்

பெயருக்கு நான் விளக்கம் தரவேண்டுமென எனக்கு விளங்கவில்லை!

'பெயரில் என்ன இருக்கிறது?' என்று புலம்பி விட்டான் கவிஞன். ஆனால் பெயரில் எவ்வளவோ மகத்துவம் இருக்கிறது; மர்மமும் இருக்கிறது. இது ஒவ்வொரு எழுத்தாளருக்கும் தெரிந்திருக்கும். அழகான 'பெண் பெயர்' சூடி எழுத ஆசைப்படுகிற ஒரு சிலருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும்!

'புனை பெயர் வேண்டியதுதான்; ஒருவனுக்கு ஏன் ஒரு டஜன் பெயர்கள்?' என்று சிலர் என்னிடம் கேட்பது உண்டு.

யாருமே தனி ஒரு பெயருடன் வாழ்வதில்லை என்பது என் கருத்து. 'பெயர் சூட்டு விழா'வின் போது இடப்படுகிற பெயர் தானா எல்லோராலும் அழைக்கப்படுகிறது? 'மாமனார் பெயரைச் சொல்லாத' அம்மா ஒரு பெயரால் அழைக்கிறாள்; வேறொருவர் வேறொரு செல்லப் பெயரால் கூப்பிடுகிறார். பிறர் சூட்டும் பட்டப் பெயர்கள் வேறு! உலக நியதியே இப்படி இருக்கிறது. எனக்கு நானே ஏன் பல பெயர்கள் சூட்டிக்கொள்ளக் கூடாது என்று எண்ணினேன். பல நாமங்கள் பெறும் உரிமை கடவுளுக்கு மட்டும் தான் 'ரிஸர்வ்டு' என்ற கண்டிப்பு எதுவும் இல்லை அல்லவா? கடவுளோடு போட்டி போடுவதாக நம்புகிற இலக்கிய கர்த்தாவும் பல பெயர்கள் சூட்டிக் கொள்வதில் தவறு எதுவுமே கிடையாது என்பது என் கட்சி.

சாதாரண ரா. சு. கிருஷ்ணஸ்வாமி ஆக எழுத ஆரம்பித்திருந்த நான் வல்லிக்கண்ணன் என மறுமலர்ச்சி பெற்றது ரசமான விவகாரம் தான்.

1939-ல் தமிழ் நாட்டில் பரபரப்பு ஊட்டும் பத்திரிகைகள் சில வாழ்ந்தன. அநேக ஏடுகளில் 'தூங்காதே, தமிழா! துள்ளி எழுந்திரு! நிமிர்ந்து பார்! கொட்டாவி விடு! என்ற தன்மையில் விறுவிறுப்பான எழுத்துக்களே

நிறைந்திருக்கும். அத்தகைய உற்சாக உணர்ச்சித் தீ மயக் கட்டுரைகளை நானும் ஒரு பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும் எழுதி வந்தேன். வேறொரு ஆரம்ப எழுத் தாளருக்கு அது பிடிக்கவில்லை. 'இப்படி ஒரு நபரே இதழ் தோறும் எழுதி வருவது நல்லதல்ல; ஒவ்வொரு இதழிலும் எழுத ஆசைப்படுவதனால்தான் உங்கள் எழுத்து உயிரற்றுப் போகிறது' என்று அவர் சொன்னார்.

அடுத்த இதழில் ரா. சு. கிருஷ்ணஸ்வாமியின் கட்டுரை இல்லாமலிருந்தது கண்டு அவர் மிகவும் மகிழ்ந்தார். அதைவிட அதிகமான உற்சாகம் கொண்டார். வல்லிக் கண்ணன் எனும் 'புதிய பேர்வழி எவனோ' எழுதியிருந்த ஒரு கட்டுரையைப் படித்துவிட்டு.

''பாருங்கள் ஸார்! எவ்வளவு உணர்ச்சிகரமான எழுத்து! நெருப்பு மாதிரி நடை! ஆகா!'' என்று வியந்து பாராட்டி, அந்தக் கட்டுரையை அவரே என்னிடம் வாசித் துக் காட்டினார். அதை எழுதிய 'சொள்ளமுத்து' நான் தான் என்று நான் அவரிடம் சொல்லவில்லை. 'ஈன்ற பொழு தினும் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்றுதானே வள்ளுவர் சொல்லியிருக்கிறார்? அவர் காலத்தில் எழுத்தாளர்களும் கிடையாது; பத்திரி கைகளும் கிடையாது அன்றோ! இருந்திருப்பின், 'எழுதிய பொழுதினும் பெரிதுவக்கும், தன் எழுத்தை நன்று நன் றெனப் பிறர் போற்றக் கேட்ட எழுத்தாளன் நெஞ்சு' என்கிற கருத்தை இலக்கண சுத்தமான குறளில் புகுத்தி யிருப்பார் அவர்!

'உங்கள் புனைபெயரின் தத்துவம் என்ன?' என்று பலர் கேட்பது வழக்கம். 'தத்துவமுமில்லை, கத்திரிப் பிஞ்சு மில்லை. ராஜ வல்லி புரம் கிருஷ்ணஸ்வாமி என்பதன் பரிணமிப்பு தான் வல்லிக்கண்ணன் ஆகும்' என்பதே எனது பதில்.

# 4

**வாசவன்**

'ஏன் இந்தச் சொந்தப் பெயர்?' என்னையே நான் கேட்டுக்கொண்ட சம்பவம் நிகழ்ந்தது 1944-ல். அது யுத்த காலம். தத்தம் பெயரை நாட்டுவதற்குப் பெரிய பெரிய வல்லரசுகளெல்லாம் குண்டு மழை பொழிந்த பேராபத்தான காலமுங்கூட. இப்படிச் சுண்டக்காயிலிருந்து சுரைக் காய்வரை பெயர்ப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த பொழுது நான் மட்டும் 'பெயர் மாறுட்டப் போராட்டம்' நிகழ்த்திக் கொண்டிருந்தேன்.

அதற்குக் காரணம் இதுதான்: எஸ். சீனிவாசன் என்று ஒருவர் கதை எழுதிக் கொண்டிருந்தார். அவர் அப்படியே எழுதிக்கொண்டு போயிருந்தால் நான் சந்தோஷப் பட்டிருப்பேன். ஆனுல், நான் எழுதியதைக்கூட அவர் எழுதியதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தார். இன்னுங்கூட அவர் கொஞ்சம் அதிகமாகப் போய், "யாரோ ஒரு பயல் என் கதைகளை யெல்லாம் அவன் எழுதியதாகச் சொல்லித்திரிகிருனே!" என்று சொல்ல ஆரம்பித்தார். என் தகப்பனுரின் பெயர் 'எஸ்'ஸில் ஆரம்பிப்பதாலும், என் பெயர் சீனிவாசனுக இருப்பதாலும், என்னில் அவர் உலாவத் தொடங்குவதா? என் இதயத்தில் எழுந்த கேள்வியை அவரிடமும் கேட்டேன். "உலகத்தில் இரண்டு எஸ். சீனிவாசன்கள் இருக்க முடியாது. நீ வேண்டுமானுல்

பெயரை மாற்றிக்கொள்ளேன்!'' என்றார் அந்த என் நிழலார்.

அந்தச் சமயத்தில், 'ஏன் இந்தச் சொந்தப் பெயர்?' என்ற போராட்டம் என்னுள் நிகழ்ந்தது'. ஒரு புதுப் பெயர் புனையலாமா?—சிந்தித்தேன். இலக்கியத்தைப் புரட்டினேன். சீத்தலைச் சாத்தனார்கள்தாம் கண்ணுக்குத் தெரிந்தார்கள். பசுமை தெரியவில்லை. நிகண்டைப் புரட்டினேன். 'பகவனே ஈசன் மாயோன், பங்கயன், சினனே புத்தன்' என்ற மாதிரியில் பதினோராவது தொகுதி நீண்டது. பன்னிரண்டாவது பெயர்த் தொகுதியைப் புரட்டினேன். அங்கு கிடைத்தது: 'வாசவன்'. என் பெயரின் பிற்பகுதியில், கூட ஒரு 'வ'வைச் சேர்த்து விட்டால், இந்திரனின் உருவம் தெரிகிறது. அந்த எஸ். சீனிவாசனும் இந்த 'வ'வில் விழுந்து புரள முடியாதல்லவா?

எழுத்தாளன் என்பவன் ஒரு பூக்காரனாக இருக்க வேண்டுமென்று நான் அடிக்கடி சொல்வது உண்டு. அவன் தரும் மலர்களின் விதவிதமான மணத்தைப் போல, எழுத்தாளனும் விதவிதமான கருத்து மலர்களை மணத்துடன் வாசகர்களுக்குத் தரவேண்டும். 'வாசவன்' என்பதற்கு 'மலர்களை விற்பவன்' என்ற ஒரு பொருளும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

நான் என் வாசகர்களுக்கு அளிக்கும் மலர்கள் மணமுள்ளவை என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. கனகாம்பரமாக ஏதாவது உங்களுக்குத் தோன்றினால், அது அந்த எஸ். சீனிவாசனுக்குச் சொந்தமானதாகத்தான் இருக்கும்.

# 5

**'பிலஹரி'**

ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் அதிகாரி இரண்டு பக்கங்கள் எழுதுகிருர். பத்து ரூபாய் சன்மானம் பெறும் எழுத்தாளர் பத்தே வரிகள் எழுதுவார். முன்னவரின் எழுத்துக்கு மதிப்பு, கௌரவம் எல்லாம் ஆபீஸ் சுவர் களுக்கிடையேதான். பின்னவரின் பேணுவுக்கோ, படிக்கத் தெரிந்த பாமரர் உள்ள இடத்திலெல்லாம் வரவேற்பு. காரணம், எழுத்தாளனின் எழுதுகோல் கிறுக்குவது ஒரு 'படைப்பு.'

'எழுதுவது ஒரு கலை'—ரசனை உள்ளம் படைத்த வாசகப் பெருமக்களின் கௌரவமான கூற்றுதான் இது. ஐயமில்லை. ஆனுல் எழுத்தாளனுக்கோ...?

"ரைட்டிங் என்னுடைய பொழுது போக்கு சார்!..." என்று ஒரு சில நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது விஷயமாக நான் சிந்தித்ததும் உண்டு. அப்படி ஓர் எண்ணம் எழுதுபவனுக்குப் பலம் பொருந்திய சூழ்நிலை என்று கூற முடியுமா?

"எங்கள் படைப்பு உங்களுக்குக் கலையாகத் தோன்ற லாம். ஓரளவு இது உண்மையுந்தான். ஆனுல் நாங்கள் இதை ஓர் உபாசனையாக ஏற்றுக் கொள்கிறேம். நாங்கள் உபயோகிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் ஆண்டவனை

அடியார் அர்ச்சிக்கும்போது பிரயோகிக்கும் பதம் போன்றது!'' என்று அந்தக் 'கலை'யை ஓர் உபாசனையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது என் கொள்கை: நடைமுறைத் தத்துவமும்கூட.

ஆகவே, எழுதுவது கலை, எழுதுபவன் கலைஞன் என்று சொல்லும்போது, தானே ஒரு எழுத்தாளனாக இருந்து கொண்டு, பேனா பிடிக்கும் மற்றவர்களைப் பார்த்து—அறிமுகம் இல்லாதவர்களாக இருந்தபோதிலும்—'பலே! உங்கள் கதையை இந்தப் பத்திரிகையில் படித்தேன். இந்த இடம் அபாரம். நல்ல கருத்து. ஆனால் இந்த இடத்தில் இப்படி மாற்றியிருக்கலாம்!' என்று ஒருவர் மனம் விட்டுக் கூறினால், அந்தக் கலையை—அந்தப் பண்பை எவ்வார்த்தை கொண்டு வர்ணிப்பது? பிறர் கருத்தை, எழுத்தின்—வெற்றி தோல்வியை பண்பட்ட ஓர் உள்ளம் விமர்சிக்கிறதே—இந்த உணர்வுதான், எழுத்தெனும் செடிக்கு வார்க்கும் நீர் போன்றது. அப்படி ஒரு நண்பர் எல்லோருக்கும் கிடைத்தால்? நான் கொடுத்து வைத்தவன்; கிடைக்கப் பெற்றேன். பலன்: நான் 'பிலஹரி'யானேன்.

1954-ம் ஆண்டு.

அப்போது பெரம்பூர் வாசம் எனக்கு. ஐந்து பகுதிகள் கொண்ட காலனியில், இரண்டாவதாக நானும் முதல் 'போர்ஷ'னில் நண்பர் திரு ஜடாதரனும் இருந்தோம்.

அந்த இடத்திற்குக் குடியேறிய குறுகிய காலத்திற்கெல்லாம் ஜடாதரனை ஓரளவு புரிந்துகொண்டு விட்டேன். கையில் பேனா பிடிப்பவன்—நல்லதொரு சிருஷ்டியை படைத்தானாகில், அவன் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து 'சபாஷ்' போடும் இந்தக் கலை உள்ளம்தான், என்னுள் நீறு பூத்த நெருப்புப் போன்று வெகுநாள் உறங்கிக் கிடந்த அந்த ஆசையைக் கிளறிவிட்டது. அப்போது நான் எழுத்தாளனாக இல்லாவிட்டாலும், பத்திரிகைகளின் கதைகள்,

பிரபல ஆசிரியர்களின் எழுத்தோவியங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் எனக்குக் கொஞ்சம் ஞானம் இருந்ததால், என்னுடன் இவை சம்பந்தமாக நண்பர் அளவளாவுவது உண்டு

"ஆமாம்; இலக்கியம் பற்றி இவ்வளவு பேசுகிறீர்களே; நானும் கதை எழுதட்டுமா?" என்று கேட்டேன். பாதி விளையாட்டும் பாதி உண்மையாகவும், "ஊம்!" என்றார்.

*　　*　　*

மூன்றாம் நாள் இரவு; அதே நேரம்.

"ஏனய்யா! இதுக்கு முன்னாலே ஏதாவது கதை எழுதிப் பழக்கம் இருக்கா, என்ன? ஏதோ ரொம்ப நாள் எழுதின வர் மாதிரி வார்த்தைகள் 'விழுந்திருக்கே?'...ம்; இது கட்டாயம் பிரசுரமாகும். டி. இராமன் என்று சொந்தப் பெயரிலேயா எழுதப் போகிறீர்கள்?"

"எனக்கு இதெல்லாம் புதிது சார்!"

நான் முடிக்கவில்லை; மேஜை மீதிருந்த பேனாவை எடுத்து, தலைப்பின்கீழ் 'பிலஹரி' என்று எழுதி என்னிடம் காண்பித்தார் அவர்.

"அப்படி என்றால் என்ன அர்த்தம்...?" என்றேன் வெகுளியாக.

"சரிதான்! சங்கீத ஞானம் சூன்யமா? ம்; இதுவும் புதுமைதானே? சங்கீதமே தெரியாத உமக்கு இந்த அழகான ராகத்தின் பெயர் வைத்தால், படிப்பவர்கள் உம்மை சங்கீதத்தில் புலி என்று நினைத்துக் கொள்ளட்டுமே?" என்றார்.

அந்தக் கதை ஆனந்த விகடனில் மூன்று வாரங்கள் கழித்து வெளியாகியது. 'பிலஹரி' பிறந்தது.

அதன்பின் அநேக நண்பர்கள் என்னை "எப்படி சார் இந்தப் பெயர் வைத்துக்கொண்டீர்கள்?" என்று கேட்கும் போதெல்லாம் நான் சொல்வது இதுதான்:

"பெயரைப் பார்த்து எடை போட்டு விடாதீர்கள். சங்கீதத்தின் 'ஆ' 'ஆவன்னா'கூட தெரியாதவன் நான். ஆனால் என் எழுத்தில் என்னைவிட அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள ஓர் இலக்கிய நண்பரின் படைப்புதான் பிலஹரி..."

# 6

'கேதாரி'.

கதை எழுத வேண்டும் என்று ஆரம்பிக்கும் அநேக எழுத்தாளர்களுக்கு என்ன பெயரில் அதை எழுதி அனுப்புவது என்ற பிரச்னை வந்து விடும். சிலர் என்னிடமே வந்து ஆலோசனையும் கேட்டிருக்கிறார்கள். புனை பெயர் மோகம் கதை எழுதுவதைக் காட்டிலும் அதிகமாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

"அப்படி மோகமில்லாத மனிதராக நீர் இருப்பது தானே? ஏன் இந்தப் புனை பெயர்?..." என்று உங்களில் யாரோ ஒருவர் முணு முணுப்பது எனக்குக் கேட்காமல் இல்லை.

"அதுலேதான் இருக்குது கதை!" என்றார் சமீபத்தில் இருந்த ஒரு நண்பர், ஏதோ ஒரு கட்டுரையைப் படித்து விட்டு.

"எதுலே?" என்றேன் நான்.

நண்பர் விளக்க ஆரம்பித்து விட்டார்.

"ஒவ்வொரு எழுத்தாளனும் தன் எழுத்தைப் பலர் படிக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறான். அதிலும் தனக்கு வேண்டியவர்கள் படித்துப் பாராட்ட வேண்டும் என்பது அவனுடைய பெரு விருப்பம். ஆனால் இந்தச் சுற்று வட்டார மனிதர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு

அவனுடைய குறைபாடுகளேதான் எப்போதும் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கும். உயர்ந்த சக்திகள் அவர்களுக்குத் தெரியாது. அது சமயம் இந்தப் புனை பெயர் போட்டு எழுதி, அவர்களைப் பாராட்டச் செய்து விட்டு, 'இதை எழுதியது இந்தக் கைதான்; என்னை எப்பொழுதும் உருப்படாதவன்: புத்தி கிடையாது என்று சொல்வீர்களே, இதற்கு என்ன சொல்கிறீர்கள்?' என்று சவால் விடத் துணிகிறுன்.''

எனக்கு இவர் வாதம் பிடிபடவில்லை; பிடிக்கவும் இல்லை. எனக்கு இது மாதிரியான சுற்றமும் இல்லை; யுக்தியும் இல்லை.

இதில் ஒரு சங்கடம் இருப்பதாக என்னுடைய இன்ஞெரு எழுத்தாள நண்பர் சொன்ஞர். அவர் தன் சொந்தப் பெயர் போதாது என்று ஊரின் பெயரையும் சங்கீத வித்வான் மாதிரி சேர்த்துக் கொண்டிருப்பவர். ''புனை பெயரில் எழுதிவிட்டு, இது என்னுடைய கதை; எப்படி இருக்கிறது என்று கேட்டால், என்னைத் தெரிந்தவர்கள் ஏண்டா புளுகுகிறுய் என்பார்கள். ஆகையால் சொந்தப் பெயரே போதாது என்று ஊரின் பெயரையும் நான் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறேன்; ஒன்றும் தெரியாமல் செய்து விடவில்லை, ஆமாம்!'' என்றுர் அவர்.

சரி 'நம்ம' கதைக்கு வருகிறேன்.

முதன் முதலில் என் சொந்தப் பெயரிலேதான் கதைகளும் கட்டுரைகளும் எழுதி வந்தேன். சில அத்யந்த நண்பர்கள்கூட ''ஏதாவது புனைபெயர் வைத்துக் கொள்ளுங்களேன்; கிரிஸ்ப்பாக இருக்கும்,'' என்று சொன்ஞர்கள். எனக்கும் அதில் கொஞ்சம் சபலம் விழுந்தது. அதை எப்படியோ அடக்கிக் கொண்டு விட்டேன்.

இடையில் 'ஆனந்த விகட'னில் என்னுடைய சொந்தப் பெயரில் ஒரு சிறு கதை வெளிவந்தது. அதற்கு நண்பர்களுடைய பாராட்டுக்கள் கிடைத்த போதிலும், ஒரு நண்பரின் கோபத்திற்கும் நான் ஆளாக நேர்ந்தது.

# 7

'கலைப்பித்தன்

சில ஆண்டுகளுக்கு முன் ஒருநாள்–அந்த ஒரு நாளிலே!

ஆலயத்தில் பாதிரியார் என் தலையில் தண்ணீர் ஊற்றி, சுந்தரராஜன்' என்று பெயர் வைத்தார். 'குவா, குவா' என்று அழுதேன். ஆம்; பிறந்த பொழுதும் அழுதேன், பெயர் வைக்கும் பொழுதும் அழுதேன்; எழுதும் பொழுது அழக்கூடாது என்பதற்காகத்தான் 'கலைப்பித்தன்' என்ற புனை பெயரிலே நான் புகுந்தேன்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், முதன் முதலில் ஒரு கட்டுரை யெழுதி, அதை 'ஹிந்துஸ்தான்' என்ற வாரப் பத்திரிகைக்கு அனுப்பினேன். அதன் ஆசிரியர் திரு, ரா. நாராயண அய்யங்கார் என் கட்டுரையைப் பிரசுரித்து, என் புனை பெயரைக் கௌரவித்தார். பின்னர் தொடர்ந்து அதில் எழுதினேன். பத்திரிகை உலகில் நான் திரு ரா. நா அவர்கட்கு என்றும் கடமைப் பட்டுள்ளவன்.

இந்தப் பெயர் வெறும் பெயரல்ல. உண்மையிலேயே கலையின் மீது எனக்குப் பித்து; கன்னித் தமிழின்பால் எனக்குக் காதல். அடியேன் இருபத்து நான்கு மணி நேரமும் சிந்திப்பதற்காக ஆண்டவன் என்னை ஊனமாக்கி விட்டான் போலும்! 'கால் நடையின்றி இவரது தமிழ் நடை முழு வேகத்துடன் செல்கிறது' என்று 'சுதந்திர தீபம்'

என்னும் என் நூலுக்கு முன்னுரை எழுதிய சுவாமி சுத்தானந்த பாரதியார் சொல்கிறார்.

1946-ஆம் ஆண்டு நான் ஆசிரியனாக இருந்த 'கலைமல'ரில் 'நக்கீர வாரிசு' என்ற புனைபெயரில் புத்தக விமர்சனம் செய்து வந்தேன். 'அம்புலி' என்ற சிறுவர் வாரப் பத்திரிகையில் 'கலையண்ணா' வாக இருந்தேன்.

ஆனால்?...

'ஆனால்' என்ற இந்த வார்த்தையை மனவேதனையுடன் வெளியிடுகிறேன். என் புனை பெயரோடு போட்டியிட்டு, இப்பொழுது எத்தனையோ 'கலைப்பித்தர்கள்' தோன்றி விட்டனர். கீரைக் கடைக்கு எதிர்க்கடையாகக் கீரைக் கடையே வைக்கும் தமிழர்கள், 'கலைப்பித்தன்' என்ற என் பெயர்மீது காதல், அல்ல—அல்ல—மோகங் கொண்டு என் புனை பெயரில் புகுந்து வருகிறார்கள். இந்த 'உமா'வைக் கண்ணுற்ற பிறகாவது, அவர்கள் என் புனை பெயர் மீது கொண்ட மோகத்தைக் கை விடுவார்களா?

'கோவிலிலே வைத்த இயற் பெயரை விட்டுவிட்டானே!' என்று ஒரு கும்பல் அங்கலாய்க்கிறது. யார் எதைச் சொன்னால் என்ன? என் புனை பெயர் என்னோடு இணைந்து விட்டது; ஆம்...!

# 8

'மாறன்'

புனைபெயரின் முக்கிய லட்சியம், அது என்ன காரணத்திற்காகச் சூட்டிக் கொள்ளப்பட்டது என்பதைச் சொல்லாமல் இருப்பதுதான். தங்களுக்கு மட்டுமே பிரமாதமாகப் படும் ஒரு பைத்தியக்காரக் காரணத்திற்காக அந்தப் புனைபெயரை வைத்துக் கொண்டிருக்கலாம் அவர்கள்; அதை வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்படுவார்கள் சில எழுத்தாளர்கள்.

'தராபதி' என்ற புனைபெயரில் முன்னொரு காலத்தில் என் கவிதைகள் வெளிவந்தபோது, மேலே சொன்னது போல, புனைபெயரின் காரணத்தைச் சொல்ல நான் வெட்கப்பட்டது உண்டு; பயந்ததும் உண்டு. 'தராபதி' என்று ஒருபுனை பெயருக்குள் மறைந்து கொண்டு கவிதைகள் எழுதியதில் எனக்கு ஓர் அனுகூலமும் ஏற்பட்டது. 'மணிக்கொடி'யில் எனது கவிதை இந்தப் புனைபெயரில் வெளிவந்தபோது, 'மணிக்கொடி'யை வரிவரியாகப் படித்து இன்புறும் என் இலக்கிய நண்பர்கள் இரண்டொருவர் என்னிடமே எனது கவிதையைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள். அவர்களுக்கு அப்பொழுதெல்லாம் 'தராபதி' என்பது நான்தான் என்று தெரியாது.

நான் கவிதை எழுதுவதற்கு மிகவும் பயந்து கொண்டிருந்தேன். ஆகையால், எனது கவிகளைப் பற்றி பாரபட்ச

மற்ற அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளவும் கொஞ்ச காலம் வசதியளித்தது இந்தப் புனைபெயர். 'தராபதி' என்ற புனைபெயர், அதற்குரிய காரணத்தில் ரசனை குறைந்து விட்டதனாலோ என்னவோ, அது என்னைவிட்டு நழுவிப் போய்விட்டது.

'சுமதி' என்ற புனைபெயரை வைத்துக் கொண்டு ரேடியோ நாடகங்கள் எழுதினேன்.

சுமதி என்பது ஒரு பெண்மணியின் பெயராகவும் இருக்கலாமே என்பதை உணர்ந்ததும், ஆண்பாலுக்கே உரிய புனைபெயர் ஒன்றைத் தேடுவதில் தீவிரமாக முனைந்தேன். முன்போல விட்டுவிடக் கூடிய பெயராக இருக்காமல், நிரந்தரமாக வைத்துக் கொள்ளுதற்குரிய ஒரு நல்ல புனைபெயருக்காக சுமார் பத்து நாட்கள்வரை ஆராய்ந்தேன். அது தமிழ் வார்த்தையாகவே இருக்க வேண்டுமென்பதையும் முதலிலேயே தீர்மானித்துக்கொண்டேன்.

இன்றைய பிரபலத் தமிழ் எழுத்தாளர்களில் இருபது பேரின் புனைபெயர்ப் பட்டியலைக் கொடுத்திருந்தது ஒரு தமிழ்ப் பத்திரிகை. அவர்கள் தங்களுடைய புனைபெயர்களைக்கூடத் தமிழில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தது, அந்தப் பத்திரிகை. அதைக் கண்டு நான் மிகவும் வருந்தினேன்.

நான் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவன். பாண்டிய மன்னர்களில் ஷெண்பக மாறன் என்பவன் ஒருவன். அந்தப் பெயர், அழகும் கம்பீரமும் கொண்டதாகத் தோன்றியது. தமிழ் வளர்த்த பழம் பெரும் மன்னன் பெயராகவும் இருக்கிறது. ஆகையால் நானும் அப்பெயரையே சூட்டிக் கொள்ள ஆசைப்பட்டேன். 'ஷெண்பக மாறன்' என்பது சற்று நீளமாக இருந்ததால், பாண்டியன் என்ற பொதுப் பெயரை உணர்த்தும் 'மாறன்' என்பதையே என் புனைபெயராகச் சூட்டிக் கொண்டேன்—போன மகா மகத்தின் போது.

# 9

**'விக்கிரமன்'**

மகாகவி பாரதியார் பத்திரிகையில் எழுதி வந்த காலத்தில் பல பெயர்களைப் பூண்டு ஒரே இதழில் பல கட்டுரைகள் எழுதுவாராம்.

பேராசிரியர் கல்கி அவர்களும், எஸ். வி. வி. அவர்களும் ஏன் புனைபெயர் பூண்டனர்? கல்கி அவர்கள் கல்கி, கர்நாடகம், ரா.கி. லாங்கூலன், தமிழ் மகன் என்றெல்லாம் பூண்டு கட்டுரைகள் வரைந்தாரே, ஏன்? விடை எனக்குத் தெரியாது!

என்னைப் பொறுத்தவரை புனைபெயர் பூணும் பழக்கம் கையெழுத்துப் பத்திரிகை நடத்திய காலத்து ஏற்பட்டது. ஒரே இதழின் பக்கங்களை நிரப்பப் பல பெயரில் எழுதும் கட்டாயம் ஏற்பட்டது. சு. வே. சுயோதனன், சானவி, விக்கிரமன்*, பாண்டியன் இப்படியாகப் பல பெயரில் எழுதிப் பக்கங்களைப் பூர்த்தி செய்து வெளியிடுவேன்.

பத்திரிகைத் துறையில் பிழைக்கவும், தொண்டாற்றவும் இறங்கியபோதுகூட, புனைபெயர் வைத்துக்கொள்ளும் கட்டாயம் ஏற்படவில்லை. பலருக்கு என் சொந்தப் பெயரே, புனைபெயரோ எனும் சந்தேகத்தை ஊட்டியிருக்கிறது.

'வேம்பு' என்று குறியிட்டு சிலர் எழுதி, "ஸார், வேம்பு என்று எப்படிப் பெயர் வைத்துக் கொண்டீர்கள்?" எனக்

கேட்பர். எனக்குச் சிரிப்புத்தான் வரும். சிறு வயதில் எனக்கு அழுகையே வந்திருக்கிறது. என் தாயிடம் ஓடி, "அம்மா, எனக்கு மட்டும் ஏனம்மா இப்படிப் பெயர் வைத்தாய்? எல்லாரையும் போல கிருஷ்ணமூர்த்தி, ராம கிருஷ்ணன் என்று வைத்திருக்கக் கூடாதா?" எனக் கேட்டேன். தாயாரின் சமாதானம் என்னைத் திருப்திப்படுத்துமோ இல்லையோ, சொந்தப் பெயர் பழகிவிட்டது. பழகாமல் என் செய்யும்?

'அமுத சுரபி'யின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்த பிறகும் பல வருடங்கள் நான் புனைபெயரை நாடவில்லை. ஒருமுறை மாணவர் பகுதிக்கு எழுத வேண்டியதாயிற்று; ஒரு கதையும் எழுத வேண்டியிருந்தது. அப்போதுதான் புனை பெயரை நாடி ஓடினேன். 'எந்தப் பெயரில் எழுதலாம்? நான் எழுதுவதாகத் தெரியக் கூடாது!'—சிந்தித்தேன்; சிந்தித்தேன். கடைசியில் பழைய கையெழுத்துப் பத்திரிகைகள் நினைவுக்கு வந்தன. என்னுடைய பல நாமங்களிலே ஒன்றும் பிடிக்காத நிலையில், 'விக்கிரமன்' விக்கிரமாவதாரம் எடுத்து நின்றது. எப்படி அந்தப் பெயர் வந்தது? கையெழுத்துப் பத்திரிகையில் நான் ஏனோ அந்தப் பெயரைச் சூட்டிக் கொண்டிருந்தேன்.

ஒரே இதழில் விக்கிரமன் என ஒன்று, சொந்தப் பெயரில் ஒன்று என எழுதினேன். "ஸார், விக்கிரமன் என்று யாரோ எழுதுகிறார்கள். நன்றாக இருக்கிறது; அவரைப் போன்றவர்களுக்கு இடம் கொடுங்கள்!" என்ற நண்பரின் வேண்டுகோளின்படி, விக்கிரமனையே அதிகமாக எழுதச் சொன்னேன். பலருக்குத் தெரியாது, வேம்பு என்ற மூன்றெழுத்தும், விக்கிரமன் என்ற ஆறு எழுத்தும் ஒன்று என்று...

# 10

'ரஸவாதி'

'சொந்தப் பெயரில் எழுதுவதற்குத் தைரியம் இல்லாதவர்கள்தான் புனைபெயரில் எழுதுவார்கள்' என்கிற ஒரு கிண்டலான அபிப்பிராயம் சாதாரணமாக உண்டு. அப்படிப் பார்த்தால், எழுதத் தெரியும் என்று பேனுப் பிடித்து முன் வருவதற்கே ஒரு துணிச்சல்தான் வேண்டும். நான் குறிப்பிடுவது இலக்கிய ரீதியான எழுத்தை. எழுதுவதெல்லாம் இலக்கியமாகி விடாது என்பது நம்மில் அநேகருக்குத் தெரியாத விஷயமா, என்ன?

மனத்தில் நினைக்கும் கருத்துக்களைச் சொல்லவோ எழுதவோ நான் முன்வருவது அபூர்வம். ஆனுல் இந்தச் சந்தர்ப்பங்களில் கருத்தை ரசமாக சுவாரஸ்யம் குறையாமல் சொல்ல வேண்டும் என்பது என் ஆசை. என்னுல் அப்படிச் செய்ய முடிகிறது என்பது என் நண்பர்களின் அபிப்பிராயம். ஆகவே, நாற்பத்தெட்டாம் ஆண்டில் திருச்சி நேஷனல் காலேஜ் மாணவனுக இருந்து எழுத்துத் துறையிலும் நான் காலடி வைத்தபோது, தகுந்த புனைபெயராக ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற மோகம் எனக்கு. நான் சமஸ்கிருத மாணவன். அந்த மொழி இலக்கியப் பயிற்சி எனது ரசனையை வளர்த்தது என்ருல் அது மிகையல்ல. புனைபெயர் அந்தக் கல்லூரிச் சூழ்நிலையில் வடமொழி வழியிலேயே என்னையுமறியாமல் மனத்தில் உரு

வாகிவிட்டது. ''ரஸம் வததி இதி'' (ரஸமாக எதையும் எடுத்துச் சொல்கிறவன்) என்று காகிதத்தில் எழுதினேன். வடமொழி இலக்கணப்படி அது 'ரஸவாதி' என்று அமையும் அருமையான வார்த்தை. நான் புளகிதமடைந்தேன். எழுதாவிட்டாலும் பரவாயில்லை; இந்தப் புனைபெயர் அமைந்த அழகு ஒன்றே போதும் என்றுகூடத் தோன்றிற்று.

ஆனால் கவலை பிறகுதான் தொடர்ந்தது. 'நல்ல புனைபெயர் கிடைத்தது. சரிதான், அதற்குத் தகுந்தாற்போல ரஸமாக எழுதவும் முடியுமா?'—நல்ல வேளையாகத் தாய்மொழி அறிவும் வடமொழி இலக்கியப் பரிசயமும் எனக்குக் கைக்கொடுத்து நம்பிக்கை யூட்டின. தரமான கதைகளை சுவாரஸ்யக் குறைவின்றி தொடர்ந்து எழுதி அதன் மூலம் சரியான இலக்கியப் பாதையில் செல்வதான பிரக்ஞை எனக்கு உண்டு.

என் கதைகளைப் பற்றிப் பேசும்முன் புனைபெயரின் அமைப்பைப் பாராட்டியிருக்கிறார்கள் பலர். சிலர் 'ரஸவாத வித்தை வருமோ உங்களுக்கு? அதனால்தான் இந்தப் பெயரோ? என்கிறார்கள்.

இரும்பைப் பொன்னாக்கினாலென்ன? நல்ல, கருத்துக்களுக்குக் கதை வடிவத்தில் அழகும் நித்தியத்துவமும் கொடுத்தாலென்ன? இரண்டுமே ரஸவாத வித்தைதான். 'ரோல்டுகோல்டை'யும் சொக்கத் தங்கத்தையும் பிரித்து இனம் கண்டு கொள்ளும் ரசிகர்கள் இருக்கும் வரையில், இந்த அசல் ரசவாத வித்தைக்கு என்றென்றும் கௌரவம் இருக்கும் என நான் நம்புவதில் தவறென்ன?

# 11

**'நவீனன்'**

எதைப்பற்றி எழுதினாலும் அதற்கு என்ன தலைப்புச் சூட்டுவது, அதில் வந்து மோதுகிற பாத்திரங்களுக்குப் பெயர் எப்படி வைத்தால் நன்றாக இருக்கும், அத்துடன் எனக்குப் புனைபெயர் ஒன்று அவசியந்தானா என்றெல்லாம் வெகுநாட்கள் வரையில் என்னை நான் உலுக்கிக்கொண்டது இல்லை.

எழுதுவேன். என்னுடைய முழுப் பெயரையும் அப்படியே போட்டுக்கொண்டு விடுவேன்; அதில்தான் எனக்குத் திருப்தி இருந்து வந்ததாக ஓர் எண்ணம்.

ஆனால் 'நவயுவன்' என்ற பத்திரிகையில் அடியேன் ஆசிரியனாக இருந்தபொழுது, சில சமயங்களில் பத்திரிகைகளின் பக்கங்களை எப்படியாவது நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுது என்ன புனைபெயர் எனக்கு அந்தச் சமயம் தோன்றுகிறதோ, அதைக் கட்டுரைகளுக்கு அடியில் போட்டுவிடுவேன்; அச்சில் வந்த பிறகு அந்தப்பெயர் எவருடையது என்று எனக்கே ஐயமேற்பட்டு விடுவதும் உண்டு.

இப்படிப்பட்ட புனைபெயர் பட்டியல்களுக்கு நடுவே தடுமாறிக் கொண்டிருந்த என்னிடம் ஒருநாள் என் எழுத்

தாள நண்பர் சிரஞ்சீவி, "உன் பெயர் இனி நவீனன் என்று வைத்துக்கொள். நீ எழுதும் சில கட்டுரைகள் நவீன முறையில் இருக்கின்றன. ஏன், எழுத்தாளர்களிடையே இருக்கும் எந்தப் பழக்க வழக்கங்களும் உனக்கு இல்லை. மிக நவீனமாக இருந்து வருகிறாய்!" என்று என்னிடம் சமய சஞ்சீவிபோலச் சொன்னார். சொல்லிவிட்டு, "மிஸ்டர். நவீனன்!" என்று அழைக்கத் தொடங்கி விட்டார்.

அந்த நிமிடம் முதல், அரைக் கப் காப்பி (அப்பொழுது உண்டு) சாட்சியாக, ஒரு ஆறு பக்கச் சிறுகதையின் முன்னிலையில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, நான் 'நவீனன்' ஆனேன்!

புனை பெயர் கிடைத்த நிம்மதியில் நான் இருந்த பொழுது, ஒருநாள், "நவீனன் குத்தப்பட்டார்!" என்ற செய்தியை எனக்குச் சிலர் சொன்னார்கள். உடம்பில் எந்த விதமான நகக் கீறல்கூட இல்லாமல் நான் பத்திரமாக இருந்த போதுதான் இந்தச் செய்தி வந்தது. அதாவது எனக்கு 'நவீனன்' என்ற புனை பெயர் நாமகரணம் செய்த அதே சிரஞ்சீவி, தான் எழுதிய ஒரு கதையில் நவீனன் என்ற எழுத்தாளக் கதாநாயகனைச் சிருஷ்டித்து, அவனுக்குக் கத்திக் குத்தையும் கொடுத்து, என் புனை பெயருக்குத் திருஷ்டி கழித்து வைத்தார்!

இன்று, என்னுடைய இருபத்தைந்துக்கு மேற்பட்ட புனை பெயர்களை யெல்லாம் அடியோடு மறந்துவிட்டு, 'நவீன'னாகவே இருந்து வருகிறேன். வெகு பேர், என்னுடைய மூக்கில் இருக்கும் வெட்டுப்பட்ட தழும்பைக் கண்டு விட்டு கத்திக்குத்து நவீனன் நான்தான் என்று இன்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!

# 12

'மகாம்'

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1944-ஆம் வருஷத்தில் இலக்கிய வாழ்க்கையை நான் தொடங்கிய போது க. ரா. என்ற பெயரில்தான் எழுத ஆரம்பித்தேன். கே. ஆர். கல்யாணராமன் என்ற என்னுடைய இயற்பெயரைத்தான் க. ரா. என்று சுருக்கி இருந்தேன். இந்தப் பெயரில் 'கல்கி' பத்திரிகையில் அப்போது மூன்று கட்டுரைகள் வெளியாகி யிருந்தன.

அதே வருஷம் 'சங்கீத அகராதி' என்ற கட்டுரையை கே. ஆர். கே' என்ற பெயரில் 'ஆனந்த விகட'னுக்கு அனுப்பியிருந்தேன். அது மே மாத நடுவில் 'விகட'னில் வெளியாயிற்று. அதுதான் 'விகட'னில் எனது முதல் கட்டுரை. பின்னர், 'புதுமை வேண்டும்!' என்ற கட்டுரையை எழுதி அதே கே. ஆர். கே. என்ற பெயரில் 'விகட'னுக்கு அனுப்பியிருந்தேன். கட்டுரையைப் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொண்ட ஆசிரியர் ஸ்ரீ 'தேவன்', "புதுமையான முறையில் ஒரு புனை பெயரை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்டார்.

என்னுடைய ஜன்ம நக்ஷத்திரம் மகம். ஆனதால் 'மகம்' என்ற பெயரில் எழுதலாமா என்றேன், அதற்கு அவர்

அந்தப் பெயரில் வேறொருவர் சில கதைகள் எழுதியிருப் பதால் வேண்டாம் என்றார்.

என்னுடைய ஜன்ம நக்ஷத்திரம் தீர்க்கமுடியாத ஒரு பிரச்னையை, என் ஜன்ம லக்னம் தீர்க்க முடியுமா, பார்க் கலாம் என்று, "நான் பிறந்தது மகர லக்னத்தில். ஆகை யினால் 'மகரம்' என்று புனை பெயர் வைத்துக் கொள்ள லாமா?" என்றேன். ஸ்ரீ 'தேவன்' அதைக் கேட்டு மிகுந்த திருப்தியுடன் ஒப்புக்கொண்டார்.

கையெழுத்துப் பிரதியில், ஸ்ரீ 'தேவன்' அவர்கள்தான் அவருடைய ஆகிவந்த கையினால்' 'மகரம்' என்ற என்னு டைய புனை பெயரை முதன் முதலில் எழுதினார். அவர் ஆசியுடன் அவருடைய கைபட்ட வேளையினால்தான் அந்த 'மகரம்' என்ற புனை பெயர் எனக்கு இந்த இலக்கிய உலகில் நிலைத்துவிட்டது. இதை நினைக்கும் போது எனது உள்ளம் பெருமையினாலும் நன்றியறிவினாலும் நிறைகின்றது.

'க. ரா.' என்ற புனை பெயர் 'மகரம்' என்று மாறினா லும், 'கரா' என்பதற்கும் 'மகரம்' என்பதற்கும் அகராதி யில் முதலை என்று ஒரு பொருள் காணப்படுவதை நான் அறிந்தபோது ஆச்சரியமடைந்தேன். ஆனால் புனை பெய ரின் பொருள் முதலையே யானாலும், நான் இன்றுவரை எதற்காகவும் முதலைக்கண்ணீர் வடித்தது கிடையாது. வாசகர்களுடைய கண்ணீரை வரவழைக்கும் சோகக் கதை களை எழுத முயன்றதும் கிடையாது. ஹாஸ்யம் என்று நினைத்துக்கொண்டு பல கட்டுரைகளைத்தான் எழுதி வந்தி ருக்கிறேன். அந்தக் கட்டுரைகளை யாராவது படித்துக் கண்ணீர் வடித்திருந்தால், அதற்கு நான் பொறுப்பாளி யாக மாட்டேன்.

# 13

'இளம்பாரதி'

"ஏன் இந்தப் பித்தலாட்டம்...!"

நான் இதை அன்றும் உணரவில்லை; இன்றும் உணர வில்லை, தம் எழுத்துத் திறமையை கௌரவமாகப் பகிரங் கப் படுத்துவதற்காகத்தான் எழுத்தாளரிடை இந்தப் புனை பெயர்ப் பித்தலாட்டமா?

குழந்தைப் பருவத்தில் காலை ஊன்றிக் கொண்டு வாலி பப் பருவத்தைக் கைகளை நீட்டி வரவேற்றுக் கொண்டிருந்த அந்த வாழ்க்கைப் பகுதி—'இண்டர் மீடியட்' நிலை—எனக்கு நெல்லையைச் சேர்ந்த வண்ணார்ப் பேட்டையில் கழிந்து கொண்டிருந்தது. தன் மேனியிலும் கரையிலும் என்னை விளையாடச் செய்து என்னை எழுத்தேருழவனுக்கிப் பொருநை தன் காவியப் பெருமையை வெளிப்படுத்திற்று. என்னை எழுத்தாளனுக்கக் காரணமாயிருந்த அந்த வண் ணார்ப்பேட்டைக்கு மறுமலர்ச்சித் தமிழ்க் காவியத்தில் என்றும் அழியாத பெயருண்டு. 'கொட்டு மேள' ஒலி கேட்கிறதா? அதல்ல நான் கூற வந்தது. இனிமேல்தான் 'கௌரவப் பகிரங்கம்' நடக்கயிருக்கிறது.

வண்ணார்ப் பேட்டையில் முதல் பெரிய தெரு முத் தொள்ளாயிரம் தெரு. இதுவே வழக்கிலே சாலைத் தெரு வாக இருந்து வருகிறது. இந்தத் தெருவிலேதான் அந்த

நாளில்—அதாவது அவரது நெல்லை வாழ்க்கை நாளில்—'புதுமைப்பித்தன்' குடி இருந்தார். இதற்கு அடுத்தது இரண்டாம் தெரு என்ற அப்பர் சுவாமிகள் தெரு. இந்தத் தெருவுக்குப் பெருமை தேடித் தந்து கொண்டிருந்தவர் நண்பர் திரு (!) கோமதி ஸ்வாமிநாதன்.

மூன்றுவதாக இருந்த தெரு கம்பராமாயணத் தெரு. இத்தெருவில் குடியிருக்கும் எழுத்தாளனுக என்னை நியமித்துக் கொண்டேன். முதல் தெருவிலிருந்த இலக்கியப் பித்தமும், இரண்டாம் தெருவிலிருந்த இன்பப் பெருக்கும் மூன்றும் தெருவுக்கு வந்து சேர வழி இல்லையா? அதுவரை இயற் பெயரில் கதைகளையும், கவிதைகளையும் எழுதி வந்த நான், இப்படிப் புதிய சிந்தனை ஒன்றின் ஆக்கிரமிப்பால் என்மேல் முலாம் பூசிக் கொண்டேன். புனை பெயர் கிடைத்தது, இன்பப் பித்தன் என்று. இதை என் தந்தையிடம் தெரிவித்த போது...

"பிழைச்சிருக்கிற வழியைப் பாருடா; அவனைப் போல நீயும் சாகப் போறியா?"

என் தந்தையின் சொற்களில் கோபம் கலந்திருந்தது. மகன் வளத்தோடு வாழ வேண்டுமென்ற பரிவு கலந்திருந்தது. அவர் அழுத்தமாகக் கூறிய 'அவனை' என்ற சொல் புதுமைப் பித்தனைக் குறிக்கும். இத்தனைக்கும் என் தந்தையும் புதுமைப் பித்தனும் நண்பர்கள். ஒரே கல்லூரியில், ஒரே வகுப்பில் உட்கார்ந்து, ஒரே வாத்தியாரைக் கேலி செய்தவர்கள். அப்படியானால் நண்பனை நினைவூட்டும் 'இன்பப்பித்தன்' அவருக்கு மகிழ்ச்சியைத் தராமல் இருந்தது ஏன்? காரணம் இருந்தது. புதுமைப் பித்தனைப் போல நானும் எழுத்தின் ஆதிக்கத்தினுல் படிப்பென்னும் பாதையில் சறுக்கி விழுந்திருந்தேன்.

தன் மகனை வளமுடன் காண விரும்பாத தந்தை உண்டா? எனவேதான் கோபத்தோடு கோபமாக, "புனை பெயரை மாற்றிக்கொள்!" என்று அவர் என்னிடம் கூக்குரலிட்டார்.

"முதலில் வைத்த என் இயற் பெயரை என்னைக் கேட்டுக் கொண்டா வைத்தீர்கள், இன்று என் பெயரை மாற்றி உங்கள் விருப்பம்போல் இன்னொன்றை நான் வைத்துக் கொள்ள?" என்று நான் எதிர்த்து வாதாட விரும்பவில்லை. இளைஞனெனப் புதுப்பித்த விந்தைக்காகவேனும் நான் அவருடைய மனத்தைக் குளிரச் செய்யவேண்டுமல்லவா? இதை விட ஒரு மகனுக்கு வேறு என்ன வேலை இருக்க முடியும்?

'எடுத்த காரியம் யாவினும் வெற்றி கண்ட' பாரதியின் பாடல்களில் என் தந்தைக்குத் தனி பக்தி. என்னைப் போலவோ புதுமைப் பித்தனைப் போலவோ அவர் படிப் பென்னும் பாதையில் சறுக்கி விழுந்ததில்லை. அவரை நான் என் முன்னொளியாக ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

என் தந்தையின் மனத்திலிருந்து வெளிப்பட்ட புயற் காற்றுச் சூழ்நிலை என்னுள் சில கேள்விகளை எழுப்பியது. "வளமான வாழ்க்கைக்கு நீ என் செய்ய இருக்கிறாய்?" என்ற கேள்விக்கு, "சாகாத இளமை என்னில் நிலைக்க நான் உழைக்க வேண்டும்!" என்று நான் தெளிவுறுத்திக் கொண்டேன். இதனை அடுத்து பாரதித்தனமான கவிதைகள் சில என்னிடமிருந்து அவ்வப்போது உருவாயின. வளந்தரும் இளமைக்கு இலட்சிய முன்னொளி பாரதி ஆசி தரவே, இளம்பாரதி என நான் புதுப்பிறவி பெற்றேன்.

என் கைப்பிடியில் சிக்கியது முருங்கைக் கொம்பு அல்ல, புளியங் கொம்பே யென்று அறிந்தபோது என் தந்தையின் மூச்சிலே பெருமிதம் கலந்தது. "பெயரில் என்ன இருக்கிறது?" என்று கேள்வி கேட்ட ஒரு வகை நண்பர்களுக்கு மறுமொழி சொல்லும் வண்ணம் இன்னொரு வகை நண்பர்கள், "இந்தப் பெயரில் பொருநை ஆற்றின் கற்பனை வளம் தேங்கிக் கிடக்கிறது!" என்றார்கள். எது எப்படியானால் என்ன? உயர்திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களிடம் சொல்லியதைத்தான் நான் இங்கேயும் திரும்பச் சொல்ல வேண்டும்— "இலக்கியத்தில் என் பெயரைக் காப்பாற்ற நான் முயல்வேன்!"

# 14

'சாண்டில்யன்'

"சாண்டில்யன் என்று ஏன் புனை பெயர் வைத்துக் கொண்டீர்கள்?" என்று நண்பர் பூவை ஆறுமுகம் கேட்டார். அதைப் பற்றி விவரிப்பது அவ்வளவு அவசியமாக எனக்கு முதலில் புலப்படவில்லை. ஆகவே அவர் திரும்பத் திரும்பக் கேட்டும், இரண்டு மாதகாலம் பதில் சொல்லாமலே தள்ளிப் போட்டு வந்தேன். வாசகர்களும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவதாக அவர் வற்புறுத்தவே, இந்தச் சில வரிகளை எழுத முன் வந்தேன்.

நான் புனைபெயர் வைத்துக் கொண்டதற்குத் திட்டமான காரணங்கள் எதுவும் இல்லை. ஆரம்பத்தில் என் இயற்பெயரான எஸ். பாஷ்யம் என்ற பெயரிலேயே சில சிறு கதைகள் எழுதினேன். ஆனால், நான் எழுத ஆரம்பித்த காலத்தில் எல்லோரும் புனைபெயர் வைத்துக் கொண்டிருந்தபடியால் நாம் அந்த மாதிரி வைத்துக் கொள்வோமே என்றுதான் 'சாண்டில்யன்' என்ற பெயரில் எழுத ஆரம்பித்தேன்.

வரலாற்றைப் பார்க்கப் போனால், பாரத நாட்டில் முக்கியமாக இரண்டு சாண்டில்யர்கள் பிரபலமாக இருந்திருக்கிறார்கள். முதல் சாண்டில்யன் வடநாட்டைச் சேர்ந்தவர். வாழ்க்கை முறையை வகுத்துச் சொல்லும்

'சாண்டில்ய ஸ்ம்ருதி' என்ற பெரிய நூலை எழுதியிருக்கிறார். இரண்டாவது சாண்டில்யன் தமிழ் நாட்டவர் அவர் முல்லைப் புன ஆராய்ச்சியில் ஈடுபட்டு நூல்கள் எழுதியவர்.

புனைப் பெயரில் எழுதுவது என்று தீர்மானித்தவுடன் இந்த இரண்டு பெரியார்களுடைய பெயரை வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தேன். அப்படி வைத்துக்கொண்டாலாவது எழுத வராதா என்ற ஆவல். தவிர, நான் 'சாண்டில்ய கோத்திரத்'தில் பிறந்தவன். புனைபெயர் இப்படி அமைந்ததற்கு அதுவும் முக்கிய காரணம்.

இத்தகைய பெரியார்களுடைய பெயரை வைத்துக் கொண்டதாலோ, சில நாவல்களை நான் எழுதியிருப்பதாலோ நான் என்னை ஒரு பெரிய எழுத்தாளனாகக் கருதவில்லை. வான்மீகி, கம்பர், வள்ளுவர் முதலிய மகான்கள் எழுதிய பேரிலக்கியங்களைப் படித்தால், நான் எழுதுவது எழுத்தாகவே எனக்குப் புலப்படவில்லை. ஆகவே, நான் எழுதுவது ஏதோ பெரிய இலக்கியம் என்றோ, அவை அமரத்வம் வாய்ந்த படைப்புக்கள் என்றோ, நான் நினைக்கவில்லை. இப்பொழுது நாம் எழுதும் எழுத்துக்களில் எது இலக்கியம், எது இலக்கியம் அல்ல என்பதை ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் வரும் மக்களே நிர்ணயிப்பார்கள் என்பது என் அபிப்பிராயம். கால வெள்ளத்தால் கொண்டு போகப்படாத எழுத்துக்கள் பிற்காலத்தில் இலக்கியமாகத் திகழும். ஆகவே, அதைப் பற்றி இன்று செய்யப்படும் சர்ச்சைகள் பயனற்றவை என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

சில அன்பர்கள் இலக்கிய கர்த்தாக்களின் பட்டியல்களை தயாரிப்பதிலும் தங்களையும் அதில் சேர்த்துக் கொள்வதிலும் முனைந்திருப்பதை நான் அறிவேன். பட்டியல் தயாரிப்பதாலோ, நமக்கு நாமே ஓர் இடத்தை சிருஷ்டித்துக் கொண்டு அவற்றை அச்சில் பார்த்துக் கொள்

வதாலோ, யாரும் பெரிய எழுத்தாளராக ஆகிவிட முடியாது. தாம் எழுதும் எழுத்துக்கு தாமே உயர்தரத்தை கற்பித்துக்கொள்வது பண்பாட்டுக்கு ஒவ்வாத காரியம் என்று நான் நினைக்கின்றேன். கம்பன் போன்ற மாபெரும் இலக்கிய கர்த்தாக்களிடம் கூட அவையடக்கம் என்ற பெருங்குணத்தைக் காண்கிறோமே தவிர, அவையகந்தை என்ற சிறு குணத்தை நாம் காண்பதில்லை. எழுத்தாளர்கள் இதைக் கவனிக்கவேண்டும். யாரையும் குறை சொல்லவோ, என் எழுத்தைப் பற்றிப் பெருமைப்படுத்தவோ இதை நான் சொல்லவில்லை. ஆரம்ப எழுத்தாளர்களாவது, இப்பொழுது நாம் காணும் எழுத்து அகந்தை வலையில் சிக்கி விடாமல், பெரியோர்களின் சிறந்த அடிச்சுவட்டில் நடந்து செல்ல வேண்டும் என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

என் எழுத்து சம்பந்தப்பட்ட வரை, அவை மிகச் சாதாரணம். பெரிய இலக்கிய கர்த்தாக்கள் கொடுத்த பிச்சை. மக்கள் விரும்பிப் படிப்பதால், எழுதுகிறேன். விரும்பாமல் வெறுப்பதானாலும், நான் யார் என்று தெரிய வேண்டாமென்று சாண்டில்யன் என்று புனைப்பெயர் வைத்துக்கொண்டேன். இப்பொழுது அந்தக் குட்டும் வெளிப்பட்டு விட்டது!

# 15

மாயாவி

"ஏன் இந்தப் புனைபெயர்?" என்ற வரிசையில் இம் மாதம் நீங்கள் இடம் பெற வேண்டும் என்று திரு 'பூவை' கடிதம் எழுதியுள்ளார். இதைவிடச் சங்கடமான பணியை ஓர் ஆசிரியர் ஓர் எழுத்தாளனுக்கு அளிக்க முடியாது என்பது என் கருத்து. ஆம்; கதை எழுதுவதைவிட இது சங்கடமானதுதான். ஏனென்றால் கதையில் கற்பனையை இஷ்டம் போல் ஓடவிட்டு எழுதிவிடலாம். ஆனால் இம்மாதிரி விஷயங்களில் வடிகட்டின உண்மையைத்தான் கூறியாக வேண்டும். வாசகர்களோ கற்பனையை ரசிப்பதுபோல் உண்மைச் சம்பவங்களை ரசிப்பதில்லை. அதிலும் என் புனைப் பெயரைப் பற்றிய உண்மை சாதாரணமானது; உப்புச் சப்பில்லாதது. இருந்தாலும், ஆசிரியர் வேண்டுகோளைப் புறக்கணிக்க மனமின்றி அதை எழுதுகிறேன்.

நான் ஏன் புனைபெயர் வைத்துக்கொண்டேன் என்று என்னையே கேட்டுக்கொண்டால், எனக்குச் சரியான விடையளிக்கத் தெரியாது. ஏனென்றால், சிலரைப்போல் நான் எவ்வித லட்சியத்தையும் மனத்தில் கொண்டு புனைபெயர் வைத்துக்கொள்ளவில்லை. எழுத்துலகில் நான் புகுந்த காலத்தில் புனைபெயர் வைத்துக்கொள்ளுவது ஒரு நாகரீகமாக இருந்து வந்தது. அதை ஒட்டியே நானும் புனைபெயர் பூண்டேன். ஆனால் நான் 'மாயாவி' என்று புனைபெயர்

பூண்டிருப்பதற்கு நண்பர்களும் பத்திரிகாசிரியர்களும் வாசகர்கள் மனத்தில் வேறு ஒரு காரணத்தை உருவாகச் செய்திருக்கிறார்கள். அதாவது, நான் மாயாவியைப்போல் இருக்குமிடம் தெரியாமல் என்னை மறைத்துக் கொள்ளவே இப்புனை பெயரை வைத்துக் கொண்டிருக்கிறேனும்! ஆனால் புனைபெயர் வைத்துக்கொள்ளும் ஒவ்வொருவரும் வாசகர்களிடமிருந்து தங்களை மறைத்துக் கொள்ளத்தானே அவ்வாறு செய்கிறார்கள்? ஆகையால், நான் 'மாயாவி' ஆனதற்கு அவர்கள் காட்டும் காரணம் சரியாக மாட்டாது. நான் தமிழ்நாட்டைவிட்டு பம்பாயில் வந்து மறைந்து கொண்டிருக்கிறேனே யென்றால், அது இந்தப் புனைபெரைப் பூணுவதற்காகவோ, பூண்ட பெயரை நிலைநாட்டுவதற்காகவோ அல்ல. அதற்குக் காரணம் என்வயிறுதான். எனவே, லட்சியமின்றித்தான் நான் புனைபெயர் பூண்டேன். என் முதற் கதை முதல் இன்றளவும்எது எழுதினாலும் புனைபெயரில்தான் எழுதுகிறேன்; நண்பர்களுக்கு எழுதும் கடிதங்களில் கூடத்தான்.

அடுத்தாற்போல் எழும் கேள்வி: எப்படி, எதற்காக, 'மாயாவி' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தேன் என்பது. இதற்கும் திட்டவட்டமான காரணம் எதுவும் கூற இயலாது. நான் எழுத ஆரம்பிக்கும் முன், எங்கள் ஊரில், என் வயதுப் பையன்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, இரவு முன்னேரத்தில் கற்பனையாகக் கதைகள் சொல்லுவேன். ஒரு சமயம் 'மாயக் கதைகள்' என்ற தலைப்பில் பத்து நாட்கள் தொடர்ந்து பத்து விதமான கதைகளை அவர்களுக்குக் கூறினேன். அக்கதைகளிலே மாயாஜாலங்கள் செய்யும் பரதேசி ஒருவரை நுழைத்து அவருக்கு 'மாயாவி' என்று நான் பெயர்சூட்டியிருந்தேன். பின்னர், நான் முதல் கதையை எழுதிவிட்டு, என்ன புனைபெயர் வைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசித்தபோது, எனக்கு அப்பெயர் நினைவுக்கு வந்தது; அதையே வைத்துக் கொண்டேன்.

எப்படியானால் என்ன? வாசகர்களுக்கு நான் 'மாயாவி' யாகவே அறிமுகமானேன்; அப்படியே இருக்க விரும்பு கிறேன். இனிமேல் நான் விரும்பினால்கூட என் இயற் பெயருக்குத் திரும்ப முடியாது. திரும்பினால் என்னைத் தமிழ்நாட்டிலும் சரி, பம்பாயிலும் சரி, யாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஏனென்றால், கிட்டத்தட்ட இருபது வருஷங்களாக வாழ்ந்து வரும் இந்தப் பம்பாய் நகரில்கூட, மிக நெருங்கிய நண்பர்களையன்றி வேறு யாருக் கும் என்னுடைய இயற்பெயர் தெரியாது...!

# 16

'ஜடாதரன்'

பேராசிரியர் 'கல்கி' அவர்கள் புனைபெயர் மகாத்மியத்தைப் பற்றி இப்படிக் கூறியிருக்கிறார்கள்: "எல்லோருக்கும் தெரிந்த சொந்தப் பெயரில் எழுதுவதைவிட, புனைபெயரில் எழுதும்போது, வாசகனுக்கு எழுத்தில் ஆர்வம் ஏற்படுகிறது என்பது சர்வ நிச்சயம். சொந்தப் பெயரை அலட்சியமாக நினைத்து ஒதுக்கிவிடக் கூடிய ஒருவன், அதே எழுத்தாளர் புனைபெயரில் எழுதும்போது, 'அற்புதம், அற்புதம்!' என்று படிக்கிறான்."

'கல்கி'யின் வாக்கு—ஹாஸ்யமானாலும், அது சத்திய வாக்குத்தான்.

நான் 'பாலு' என்ற பெயரில் 1948-ஆம் வருடம் முதன் முதலாக சிறுகதைகள் எழுதத் தொடங்கிய போது, எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பலதரப் பட்டவை.

'பாலு' என்கிற பெயரில் கவர்ச்சி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. மேலும், வெவ்வேறு காலங்களில் 'பாலு' என்ற பெயர் பத்திரிகைகளில் அடிபட்டிருப்பது பழைய 'வால்யூம்'கள் சிலவற்றைப் புரட்டும்போது தெரிந்தது. உலகத்தில் எத்தனையோ 'பாலு'க்கள்! கணக்கிட முடியுமா அவர்களை? அத்தகைய லட்சத்தில் என்னை மாத்திரம் பிரித்து 'ஒருவனாக்க' என்ன வழி? புனைபெயர்தான்!

சிறந்த சிந்தனையாளரான திரு. கே. எஸ். வெங்கடரமணி அவர்களின் எழுத்துக்களில், மாயவரத்துப் பள்ளியில் படித்த என் இளமை நாட்களிலேயே நான் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தேன். அவருடைய கதா பாத்திரம் ஒன்றின் பெயரான 'ஜடாதரன்' என்பதைத்தான் நான் என் புனைபெயராக மிகவும் மகிழ்ச்சியுடன் தேர்ந்தெடுத்தேன்.

'ஜடாதரன்' என்ற புனைபெயரில் 21-4-51 'கல்கி' இதழில் வெளியான 'அன்பு மலர்ந்தது' என்ற கதை என் புனைபெயரை குறிப்பிட்ட சில அந்தஸ்துள்ள குடும்பங்களில் பிராபல்யம் செய்வித்தது. காரணம்—அந்தக் கதையின் மையக் கருத்து, என் பால்ய சிநேகிதன் ஒருவனுடைய குடும்பச் சூழ்நிலையை நன்கு தெரிந்துகொண்டிருந்த ஏராளமான நண்பர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஒருவருடைய மகிழ்ச்சி இன்னொருவருக்கு துக்கமாய் இருப்பதை நாம் கண்டிருக்கிறோமல்லவா? அது வேறு விஷயம்...!

அவ்வப்போது 'பளிச்' சென்று எனக்குத் தோன்றும் சில கருத்துக்களை மாத்திரம் கதைகளாக்கிவிட்டு 'சும்மா' யிருக்கிறவன் நான். என்னுடைய இலக்கிய நண்பர்களில் மிக அத்யந்தமான சிலருக்கு நான் நிறைய எழுதவில்லை என்று பெருங் குறை. எழுத்துக்களுக்கு ஓர் உயர்ந்த லட்சியம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறவன் நான். வாசகர்களுக்குக் கொஞ்சங்கூட ஏமாற்றம் தரக்கூடாத வகையில் கதைகளை எழுதி நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு போக வேண்டும் என்று எண்ணி எழுத முயற்சி செய்பவன் நான்.

ஆனால், என்னையும் என் எழுத்தையும் பிடிக்காத சிலர், "இவன் யாரடா சனியன், அப்படி என்ன பிரமாதமாய் எழுதிக் கிழித்து விடுகிறான்?" என்று சொன்னாலும் சொல்வார்கள்.

ஆம்; சாட்சாத் சனீஸ்வர பகவானுக்கு 'ஜடாதரன்' என்ற ஒரு பெயரும் உண்டு.

# 17

---

'பூவை'

பேராசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள்பேரில் ஓர் அத்யந்த பக்தி. கல்யாணசுந்தரம் என்ற பெயரில் முதல் இரண்டெழுத்துக்களுடன் தம் பெயரின் முதல் எழுத்தையும் இணைத்து 'கல்கி' ஆனார். இதில் பக்தியின் சரித்திரம் அடக்கம். கல்கி அவதாரத்துக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அன்னாரது துணைவியாருக்கும் இதற்கும் சம்பந்தமும் இல்லை.

பேராசிரியருக்குப் புனைபெயரின் அவசியம் தெரியுமென்ற சட்டமில்லை. ஆனால் பத்திரிகையின் ஆசிரியருக்குப் புனைபெயரின் அருமை அவசியம் தெரியும். இவ்வகையில் பேராசிரியர்; கிருஷ்ணமூர்த்தி அவர்கட்கு 'கல்கி' எனும் புனைபெயரின் அருமை தெரிந்தது. நாடும் ஏடும் 'கல்கி'யைப் புரிந்துகொண்டன. இன்று கல்கி வாழ்கிறார்!

அந்த அன்பான உள்ளம் ஓர் இலக்கிய ஆர்வத்தை வளர்த்து வாழ்த்திய போதுதான் 'பூவை' என்ற என் ஊர்ப் பெயரே என் புனைபெயரானது. அருமைக் கல்கி அவர்கள் தாம் எனக்கு 'பூவை'யைச் சூட்டினார். இப்போது, பெரும்பாலானோர் ஆறுமுகத்தை மறந்துவிட்டார்கள். 'பூவை'யை யாரும் மறக்க முடியாது!

'உமா'வின் பொறுப்பேற்றபோது, 'பூவை' எனக்குப் பெரிதும் உதவியது. அதேபோல, என் இயற் பெயரின் மறு அவதாரங்களுடன் என் எழுத்துக்களுக்கு 'இனம்' காட்டத் துணை நல்கின.

தொடக்கத்தில் எப்படி எனக்கு புனைபெயரில் அவ்வளவு நம்பிக்கை இல்லாமலிருந்ததோ, அம்மாதிரியே தான் இப்போதும் ஆகிவிட்டது.

ஆனாலும், 'பூவை' என்பது என் பிறந்த மண்ணின் நினைவுச் சின்னம் அல்லவா?

பூவையை நான் எங்ஙனம் மறப்பேன்?

'பூவை'யை நீங்கள் எப்படி மறப்பீர்கள்?

## முழுவதும் கற்பனை அல்ல....

அன்று நான் எழுதிய முதல் கதையும் சரி, இனி நான் எழுதப்போகும் கடைசிக் கதையும் சரி, யாவும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவைகளே. கற்பனைப் பூச்சில் என் கலை உணர்ச்சியைக் காணலாம்.

அகிலன்

# என் முதல் கதை

# 1

அகிலன்

பதினெட்டு வருடங்களுக்கு முன்னால் நான் ஒன்ப தாவது வகுப்பில் படிக்கும்போது எழுதிய முதல் கதை இது. புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் வெளியான கல்லூரிச் சஞ்சிகையில் எழுதினேன். கதையின் நகல் இப் போது கைவசம் இல்லை. கதைச் சுருக்கம் நினைவில் இருக் கிறது.

இதுதான் கதை;—

பெற்றோரற்ற ஓர் ஏழைச் சிறுவன் நகரத்துப் பள்ளிக் கூடத்தில் படிக்கிறான். பக்கத்துக் கிராமத்தில் வசிக்கும் அவன் தமக்கை அவனை மிகவும் சிரமப்பட்டுப் படிக்க வைக் கிறாள். பணக்காரக் குழந்தைகளின் மத்தியில் படிக்கும் போது, அவனுடைய ஏழ்மை பரிகாசத்துக்குள்ளாகிறது.

தீபாவளி நெருங்குவதால், உள்ளவர்கள் வீட்டுப் பிள்ளைகள் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். பைய னின் தமக்கையும் விரைவில் தீபாவளிக்கு உடையும் பண மும் அனுப்புவதாக வாக்களிக்கிறாள். ஏழைச் சிறுவனும் மற்றவர்களின் பெருமையில் பங்கு கொள்ளப் பார்க் கிறான்.

ஆனால், தீபாவளிக்கு முதல் நாள் அவன் தமக்கை திடீரென்று இறக்கிறாள். அவனுக்கு இவ்வுலகத்திலிருந்த ஒரே ஒரு ஊன்றுகோலும் ஒடிகிறது. அவனுடைய தமக்கையின் சாவுகூடப் பணக்காரக் குழந்தைகளின் பரிகாசத்துக்கு இலக்காகிறது. இதைப் பொறுக்க முடியாமல் அவன் ஆற்றில் விழுந்து உயிர் விடுகிறான்.

கதையை எழுதிக் கொடுத்த மறுநாள் தமிழாசிரியர் என்னைத் தனியே கூப்பிட்டார். எடுத்த எடுப்பில் "இதை எங்கே காப்பி அடித்தாய்?" என்று கேட்டார். எனக்குக் கண் கலங்கி விட்டது.

"போடுவதானால் போடுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம். இனி இப்படிப் பேசாதீர்கள்" என்றேன்.

சிரித்துக் கொண்டே தமிழையா என்னைத் தட்டிக் கொடுத்தார். "கதை நன்றாக இருக்கிறது. ஆனால் தலைப்பை மாற்ற வேண்டும்" என்றார்.

நான் கொடுத்திருந்த தலைப்பு—'அவன் ஏழை', அதை அவர் 'மிடியால் மடிதல்' என்று மாற்றி அமைத்தார். கதை வெளிவந்த பல நாட்களுக்குப் பின்பு, மேல் வகுப்பு மாணவர்களிடம் கேட்டு அந்தத் தலைப்பின் பொருளை அறிந்து கொண்டேன். ஏழ்மையால் இறத்தல் என்று அர்த்தமாம். எப்படியாவது கதை வந்து விட்டதே என்ற பெருமை எனக்கு.

அடடா! முதல் முதலாக என் எழுத்துக்களை அச்சில் கண்டபோது நான் அடைந்த ஆனந்தம்...!

முழுவதும் கற்பனைக் கதை என்று நான் அதைச் சொல்ல முடியாது. அன்று நான் எழுதிய முதற்கதையும் சரி. இனி நான் எழுதப்போகும் கடைசிக் கதையும் சரி, உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவைகளே. கற்பனைப் பூச்சில் என் கலை உணர்ச்சியைக் காணலாம். ஆனால் கருத்தெல்லாம் நான் காணும் உண்மைக்கே.

இருபது வருடங்களுக்கு முன்பு என் பள்ளி வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளின் தொகுப்பே அந்தச் சிறு கதை. குலமும் பணமும் அங்கே இன்றைய நிலையைவிடக் கொடுமையாகக் கூத்தாடின. சமுதாய வாழ்க்கைக்கு மனிதனை உருவாக்கும் கல்விச் சாலைகளிலேயே வேற்றுமையின் வித்துக்கள் ஊன்றப் பட்டன.

புதுக்கோட்டையில் வாழ்ந்த நான் செழிப்பு நிறைந்த பகுதியைக் கண்டதில்லை. சின்னஞ் சிறு வயதில் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். கொள்ளிடக் கரையின் நாணற்காடும், தென்னந் தோப்பும், தேக்குமரக் கூட்டமும் என்னைப் பிரமிக்க வைத்தன. என் மனத்தில் அன்று தொட்டுப் பசுமையாக இருந்த அந்தக் காட்சியையும் என் முதல் கதையில் எழுதினேன்.

ஒருபுறம் வளமும் அழகும் நிறைந்த இயற்கை உலகம். மற்ெறாரு புறம் வேற்றுமையும் வெறுப்பும் நிறைந்த மனிதர்கள்—இதையே என் கதைக் கருத்தென்று சொல்லலாம்.

பள்ளியில் என் சிறு கதையைப் படித்த பெரிய மாணவர்களும் ஆசிரியர்களும் அதை எப்படி எப்படி மதித்தார்களோ தெரியாது. ஆனால் நிச்சயம் அதை எழுதிய சிறுவனுக்கு—அப்போது எனக்குப் பதினாறு வயது—தீமையை எதிர்க்கத் துடிக்கும் ஒரு நெஞ்சு இருக்கிறது என்பதை மட்டுமாவது உணர்ந்திருப்பார்கள்.

இந்தச் சிறுகதையைத் தவிர இன்னொரு கதையையும் என்னுடைய முதல் கதை என்று சொல்லுகிறவர்கள் உண்டு. 'கலைமகள்'ளில் முதல் முதலில் வெளியான 'காசு மரம்' என்ற கதையே அது.

காவேரி என்ற ஏழைச் சிறுமி தன் தாயாரை வறுமையிலிருந்து காப்பாற்றக் காசு மரம் முளைக்க வைக்கிறாள்! வகுப்பில் யாரோ ஒரு குழந்தை ஆரஞ்சு

விதையை விழுங்கினதால், மற்றக் குழந்தைகள் அவள் வயிற்றிலிருந்து ஆரஞ்சு மரம் முளைத்து அவள் இறந்து விடுவாள் என்று பயப்படுகிறார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள் காவேரி.

காசை விழுங்கினால் காசு மரம் முளைக்குமே. பெற்றவளின் வறுமை நீங்குமே என்ற ஆசையால் காசுகளை விழுங்குகிறாள். தான் இறக்கப்போவது நிச்சயம் என்று தெரிந்தும் அப்படிச் செய்கிறாள். கடைசியில் மரம் முளைக்கிறது! பாசி பிடித்த செப்புக் காசுகளால் வயிறு கெடுகிறது. வாந்தி எடுத்துச் சாகிறாள் காவேரி. அவளைப் புதைத்த இடத்தில் ஒரு மாங்கன்று முளைக்கிறது. அதற்குக் காவேரி என்று பெயரிட்டு அதைக் கண்ணீரால் வளர்க்கிறாள் தாய்.—இதுவே காசுமரம்'.

'கலைமக'ளில் இந்தக் 'காசு மரம்' வெளியான பிறகு தான் சிறுகதை எழுத்தாளன் என்ற முறையில் நான் தமிழகத்திற்கு அறிமுகம் செய்யப் பெற்றேன். இதையும் என் முதல் சிறுகதை என்று சொல்லலாமல்லவா?

# 2

‘கேதூரன்’

‘என் முதல் கதை’ என்றால், இதில் இரண்டு வகைகள் இருக்கின்றன. கையெழுத்தில் முதலாக எழுதியதா, அல்லது அச்சில் முதன் முதலாக வந்த கதையா என்பதுதான்.

என்னுடைய முதல் மூன்று கதைகளும் அச்சு இயந்திரத்தில் ஏறாமல் என்னை ஏமாற்றிவிட்டு எங்கோ ஒளிந்து போயின. ஆசிரியர்களுக்குக் கடிதம் எழுதியும் பயனில்லை. அவர்களாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

எழுத்தாளன், எழுத்தாளனாகவே பிறக்கிறானா, அல்லது ஆர்வ மிகுதியினாலும் பிடிவாதமான உழைப்பாலும், சாதாரண மனிதன் எழுத்தாளனாக ஆக்கப்படுகிறானா என்ற சர்ச்சை எப்பொழுதும் இருந்து வருகிறது. இதிலேயும் இரண்டு கட்சிகள் உண்டு. நான் எப்பொழுதும் பின்னால் சொன்ன வகையையே ஆதரிப்பவன். நானும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவன்தான்.

இளமையிலிருந்தே எனக்குக் கதை கேட்கும் ஆர்வம் இருந்தது. ஹரிகதையில் அபாரப் பிரேமை. சுமார் பதினாறு, பதினேழு வயதாகும் பொழுது, தமிழகத்தில் ‘கல்கி’ இலக்கிய ஆட்சி செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய, ‘கள்வனின் காதலி’ ‘ஆனந்த விகட’னில் தொடர் கதையாக வந்து கொண்டிருந்தது. அப்

பு—4

பொழுது தமிழ் நாட்டில் இருந்த பரபரப்பைப்பற்றி என்ன சொல்வது? இளைஞர்கள், ஸ்திரீகள், முதியோர்கள் எல்லோரும் முத்தையன் என்ன ஆனான், கல்யாணிக்கு விமோசனம் உண்டா, அபிராமியின் குழந்தை மனம், சர்வோத்தம சாஸ்திரியின் மனிதத் தன்மை என்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது நான் மன்னார்குடியில் இருந்தேன். அங்கு சனிக்கிழமை தோறும் காலை எட்டு மணி ரயிலில் 'விகடன்' பிரதிகள் வரும். நான் நேராக ரயிலே ஸ்டேஷனுக்கே சென்று பிரதியை வாங்கிப் படித்துக்கொண்டே நடந்து திரும்பி வருவேன். வீட்டிலே பெண்டிர்கள் 'விகடன்' வந்து வாசித்து விட்டுத்தான் குளிக்கப் போக வேண்டும் என்று காத்திருப்பார்கள். படிப்பதற்கு நான் முந்தி, நீ முந்தி என்ற போட்டி வேறு. இதுபோல் தான் ஒவ்வொரு வீட்டிலும் அப்பொழுது நடந்தது.

அவருடைய கதைகள் தமிழ் இளைஞரிடையே 'நாமும் எழுத வேண்டும்' என்ற ஆசையைக் கிளப்பியது. அந்த ஆசை என் உள்ளத்திலேயும் புகுந்து எழுதத் தூண்டியது. அவருடைய "கேதாரியின் தாயார்" என்ற கதையைப் பன்முறை படித்தாலும், அதில் உள்ள சோக ரஸமும், கதைக் கோப்பும், திகட்டாத சொல் அமிர்தம். அந்தக் கதையிலே ஊறிப்போன நான் என் புனைபெயரையும் கேதாரி என்றே வைத்துக் கொண்டேன் என்பது தனிக் கதை.

இதே சமயத்தில், பேராசிரியர் ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் கம்பனையும், குறளையும் பற்றிப் பிரசங்கங்கள் செய்து வந்தார்கள். ஏதோ கச்சேரி கேட்கும் மாதிரி இருக்கும் அவருடைய பேச்சுக்கள், சம்பவங்களை நாடகமாக்கி நம் முன்னே நிகழ்வதுபோல இருக்கும் அவருடைய பிரசங்கம். இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆசையை என் இளநெஞ்சில் எழுப்பியது இவர் தான்.

இந்த இரண்டு மகான்களையும் என் இலக்கிய வாழ்விலே ஒளி காட்டியவர்களாக நினைத்து நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

இந்த இலக்கிய ஆசைகளோடு நான் பம்பாய்க்கு 1942-ல் சென்றேன். அங்கிருந்து சில கதைகள் எழுதி அனுப்பினேன். ஒன்றும் பயன் இல்லை. இரண்டு வருஷங்கள் ஒன்றும் எழுதவில்லை.

1944-மத்தியில் ஒரு கதை எழுதி 'துமிலன்' நடத்தி வந்த 'மாலதி'க்கு அனுப்பினேன். பம்பாயில் அப்பொழுதும் இட நெருக்கடி. உத்தியோகம் கிடைத்தும் தங்க இடம் கிடைக்காமல் ஊருக்குத் திரும்பியவர்களும் உண்டு. ஊருக்கும் திரும்ப முடியாமல், இருக்கவும் இடமில்லாமல் தவித்து சித்தப் பிரமை கொண்ட ஒருவருடைய கதையை எழுதி அனுப்பினேன். 'ரூம் பைத்தியம்' என்ற தலைப்பில் அது வெளியாயிற்று.

உண்மையை அடிப்படையாக வைத்துக்கொண்டு, காலத்திற்கு ஏற்றதாக இருந்ததால், என் பம்பாய் நண்பர்கள் அதை ரொம்பவும் ரசித்தார்கள்.

அதைத்தானே என் முதல் கதை என்று கூறவேண்டும்?

# 3

சுப்பிரமணியன்

'ஆனந்த விகடன்' 13-9-'36 இதழ் என் கண்ணிலே பொன்னால் பொறிக்கப்பட்டதாக இன்றும் காட்சி தரு கிறது. அதிலே வந்த என் முதற் கதை 'ஏழைகளின் தோணி'யை இன்று திருப்பிப் படிக்கும்போது, திக்கெல் லாம் புகழும் திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்றது. தாமிரவர்ணியின் சுலோசன முதலியார் பாலத்திற்குச் சற்றுத் தெற்காக அமைந்துள்ள தைப்பூச மண்டபத்தைக் கண்முன் நிறுத்திற்று. அதிலே இன்றும் ஏழை எளியவர் கள் படுத்துறங்கும் காட்சிகள்; தை மாதம் பௌர்ணமி யன்று நெல்லையப்பரும்-காந்திமதியும் திருமஞ்சனமாட வருடத்தில் இரு தினங்கள் தங்குவதற்கு மண்டபம் கட்டிய முன்னோரும், அன்றாடம் ஏழையவர்கள் படுத்துறங்க வழி வகை செய்த பக்தர்களும் வாழட்டும்!

ஏழைக்குப் பனியும், வெயிலும் மழையும் தோன்றா வண்ணம் காத்து நிற்கும் மண்டபத்தில், திடீரென இரவுக் கிரவே, வெள்ளம் பொங்கிக்கொண்டு வந்து விட்டால் மண்டபத்தில் தூங்கும் அநாதைகள், மாடிக்குப்போய் தங்கிக்கொள்ள இருப்புச் சங்கிலி ஏணிப் படியுடன் அன்று கிடந்தது; இன்று இருக்கிறதோ, என்னமோ? எதிர்பாரா மல் இரவிலே தைப்பூச மண்டபத்திலே அகப்பட்ட ஏழை

யின் உயிர்களைக் காப்பது, திருநெல்வேலி முனிசிபால்டியார் கடமையாக வந்து விடிந்தது. அவர்கள், ஏழு மைலுக்கு அப்பால் போய் தோணிக்காரர்களைக் கூட்டி வந்து காப்பாற்றுவது மிகவும் கஷ்டமாக இருந்த காரணத்தால், ஒரு தோணியையே விலைக்கு வாங்கினார்கள்; தோணியோட்டியும் வேலைக்கு அமர்த்தப்பட்டான்.

தோணியைச் செய்து முடித்த முகூர்த்தம்; தாமிர வர்ணியில் வெள்ளம் வந்தாலும் பகற் பொழுதில் வந்தது; ஆபத்தின்றி ஏழைகள் பிழைத்துக் கொண்டார்கள். 'இந்தத் தோணிச் செலவு வீண். தோணிக்காரன் சம்பளம் தண்டம்' என்று முனிசிபல் சபையில் விவாதம் நடந்ததாம். 'தோணிக்காரன் ஒருவன் தேவையில்லை, அது வீண் தண்டம்' என்றும் தீர்மானம் நிறைவேறியதாம். தோணிக்காரன் வேலையிலிருந்து விலக்கப்பட்டான். அந்த வருஷத்தில் நாற்பதிற்கும் அதிகமான ஏழைகள் தைப்பூச மண்டபத்திலே அவதிப் பட்டார்கள். இரண்டு மூன்று நாள் முப்பதடி உயரமான மண்டபத்தில் நின்றாலும், ஒரடி தண்ணீர் அவர்கள் காலடியில் ஓடும்வரை ஆபத்திலே தவித்தார்கள். ஆகாரம் கொடுப்பதும், காப்பாற்றுவதும் பிரம்மப் பிரயத்தனம். மண்டபத்தின் தட்டட்டியில் (மொட்டை மாடியில்) நிற்பவர்கள் ஆற்றோடு ஒரிருவர் அடித்துப் போவதைக் காணச் சகியாமல், பொதுஜனங்கள் துடித்தார்கள். முனிசிபல் தோணியை வரவழைக்க முயன்றார்கள். "தோணியோட்டியில்லை; தோணி மட்டும் இருக்கிறது" என்ற விபரம் அறியவும், பின்னர் மாமூல்படியே, ஏழு மைலுக்கு அப்பாலுள்ள தோணிக்காரர்கள் வந்து காப்பாற்றினார்கள்.

இதுவே, என் முதற் கதையின் வித்து. ஏழைகளின் பெயரால், நடந்த குளறுபடியில் மற்றொரு திருப்பம். அதே தோணியைக் கெட்டுப் போகாமல் காப்பாற்ற, திருநெல்வேலி முனிசிபால்டியார், நயினார் குளத்திலே ஓடவிடுவது, பெரியவர்களுக்கு 'பிளஷர் டிரிப்' காட்டுவது என்று முடிவு

செய்தனர். முதன் முதலாக கலெக்டர் 'வோட் ஹவுஸ் (மரவீடு), தமது மனையாட்டியுடன் போனதாகவும், கலெக்டர் துரையை-துரைசானியை ராமர்–சீதையாக எண்ணிய தாகவும், அவரது மெய்க்காவலர்களை குகனுக எண்ணி வந்தார் என்றும், கலெக்டர் நாயை, அநுமாராக எண்ணிய போது, குகனோடு போன கட்டத்தில் அநுமார் கிடையாது என்ற எண்ணம் வரவே, "சீ சீ!" என்று சொல்ல நாய் பாய்கிறது; தோணி அலை மோதுகிறது. கலெக்டர் கோபத்தால் தோணியில் மிதிக்க, தோணி பொத்துக் கொண்டு தண்ணீர்க் குமிழிகளை வரவேற்கிறது; துரை துரைசானி இவர்கள் தொப்பியை வாளியாக மாற்றி டபேதார்கள் நிலைமையை சமாளித்தார்கள்." என்று கற்பனையாக மாற்றினேன்.

ஏழைகளின் பெயரால் வாங்கப் பெற்ற தோணியை கரையான்களுக்கு விருந்தளித்தனர் முனிசிபால்டியார் என முடித்திருந்தேன். ஒருமாதம் சென்ற பின்னர் அந்தத் தோணியைப் பார்க்க முனிசிபால்டிக்குப் போனபோது அழகாக 'பெயிண்டு செய்து அதைத் தரை மட்டத்திலிருந்து முட்டுக் கொடுத்து உயரமாகப் போட்டிருந்தார்கள். வேப்பமரத்து நிழலிலே தோணி கிடந்தது. அங்கே நின்ற ஒருவர் என் கேள்விக்கு பதிலாக, "யாரோ ஒரு பயல் இதைப் பற்றி ஆனந்தவிகடனில் எழுதி விட்டான்; அதனுல் தோணியைச் செல்லரித்து விடாதபடி பெயிண்டு செய்து காத்திருக்கிருர்கள்" என்று சொன்ஞர்.

என் தோள்கள் விம்மின: 'என் எழுத்துக்கு மதிப்பு இருக்கிறது. வெற்றி இருக்கிறது' — இப்படியெல்லாம், பொது ஜன நன்மைக்காக நான் எழுதிய கதை அது ஒன்று தான். பிறகு, பிரசார நோக்கத்தோடு எதுவுமே நான் எழுதாமல் போய்விட்டது, ஆச்சர்யமாக இருக்கிறதா? நான் எழுதும் கதைகள், நாடகங்கள் தங்களைக் குறிப்பதாக என் உறவினர்கள், நண்பர்கள் ஒரு சிலர் சொல்ல வந்ததால், வெளிப்படையாகத் துலாம்பரமாக பிரசாரம் எழு

தக்கூடாது என்று மூடி மறைத்து, கலையம்சம் நிறைந்த தாக எழுதிவிட்டு, தப்பிக் கொள்வதே இலக்கியத்தைத் தொடர்ந்து எழுதுகிறவன் செய்யும் வழியென்று வகுத்துக் கொண்டேன். மறைத்துக்கொண்டு இன்றும் கதை, கட்டுரை, நாடகங்கள் எழுதுகிறேன்.

என் முதற்கதையில், மரவீடு (வோட் ஹவுஸ்) என்றிருந்ததை ஆசிரியர் 'கல்கி' அவர்கள் மரவீடு என்று மாற்றியிருந்ததை வெகுவாகக் கண்டித்துக் கடிதம் எழுதினேன். 'நேரில் சந்திக்கும் போது, அதுபற்றிச் சொல்லுகிறேன்' என்று எழுதினார்கள். வண்ணார்பேட்டையில் டி. கே. சி. வீட்டுக்கு 'கல்கி' வந்தபோது ஞாபகமாக, "நீங்கள் எழுத்துத் துறைக்குப் புதிது. ஆகவே உண்மையான பெயர்களை இவ்வாறு சீர்திருத்தம் காரணமாக தாக்கும்போது கூட வெளியிடுவது தொல்லை தரும். இது நிறைய எனக்கு அனுபவம். அதே கலெக்டர் இன்னும் திருநெல்வேலியில் இருக்கிறார். அப்படி இருக்கும்போது எழுதலாமா?" என்று சொன்னார்.

என் முதற்கதை வெளிவந்த அன்றுதான். வண்ணாரப்பேட்டையில் குடியிருந்த திரு. டி. கே. சி. அவர்களை, நான், 'மாறன்' திருச்சி ஆ. இ. ரே. நாடகாசிரியர் 'சோமு' (இந்நாள் 'கல்கி' ஆசிரியர்) மூவரும் போய்ப் பார்த்தோம். அதற்கு முன்னதாக நாங்கள் அவர்கள் இல்லம் போனதில்லை. அவ்வாரம் வந்த கதையை, டி. கே.சி. யும் அவர் குமாரர் தீபனும் படித்திருந்தார்கள். நான் எழுதியதாகச் 'சோமு' சொன்னதும், வெகுவாகப் பாராட்டினார்கள். அன்று முதல் எனக்குத் தீபன் அருமை நண்பராகவும், டி. கே. சி ஆசிரியராகவும் மாறினார்கள். தமிழ் உலகம் போற்றும், புகழும் 'வட்டத் தொட்டி'யில் "சுகி" யென்ற சிறு தோணிக்கும் இடம் கிடைத்தது.

# 4

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

'உமா' ஆசிரியர் என் முதல் கதையைப்பற்றி எழுதச் சொன்னார். காக்கைச் சிறகினிலே கண்ணனுடைய கருமையைக் கண்டு களித்த கவியைப்போல, என் நெஞ்சம் என் கதைகளின் கதையிலே திரிந்துகொண்டு, முதல் கதையைத் தேடி ஓடி இன்புற்றது.

"தற்கொலைக்கு மிகவும் எளிய வழி ஒன்று இருக்கிறது" என்று வியாசர் ஒரு தடவை அர்ஜுனனிடம் சொன்னாராம்.

"அது என்ன?" என்று கேட்டான் அர்ஜுனன்.

"நிறைந்த சபைதனிலே உன்னைப் பற்றியும் உன்னுடைய நற்குணங்களைப் பற்றியும் வீரதீர பராக்கிரமங்களைப் பற்றியும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிரு; போதும்!" என்று வியாசர் சொன்னாராம்.

ஆனால், இப்படி நடந்தது மகாபாரத காலத்திலே. இப்பொழுது ஒருவருடைய தமுக்கை மற்றவர் அடித்துக் கொள்ள வேண்டிய நிலை வந்திருக்கிறது. அதனால்தான் 'உமா' ஆசிரியர் சொல்கிறார். "அப்பனே, உன் முதல் கதை எது? அந்த டமாரத்தை இப்படிக்கொண்டு வந்து 'டம டம'வென்று அடி!" என்று.

## 2

குயில் தானாகப் பாடுகிறது; மயில் தானாக ஆடுகிறது; ஆறு தானாகப் பாய்கிறது; தென்றல் தானாக வீசுகிறது. ஆயினும் இவையனைத்துக்கும் ஒரு தூண்டுதல் வேண்டும். இளவேனில், மேக மண்டலம், மாமலை, தென்திசை-இப்படிப் பல. இவற்றின் இயக்கத்துக்குக் காரணமாகின்றன. அதுபோலவே கதை எழுதவும் ஒரு தூண்டுதல், ஓர் எழுச்சி வேண்டும். நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகள். உள்ளத்தை உந்தும் உணர்ச்சி, தன்னம்பிக்கையை எழுப்பும் பத்திரிகாசிரியரின் கடிதம், வாசகரின் பாராட்டு, இலக்கிய உலகில் நமக்கு மாறுபட்ட கருத்து உடையவருடைய உத்வேகமூட்டும் இகழ்ச்சி—இப்படிப் பல காரணங்கள் கதை எழுதத் தூண்டுகோலாக அமைகின்றன. ஒவ்வொரு கதையின் கதைக்கும் பின்னால் இப்படிப் பல சூழ்நிலைகள் குவிந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் எழுத்தாளன் தானே எழுத முடியுமே அல்லாமல், விமரிசகரோ, வாசகரோ கற்பனை செய்துகூட வரைய இயலாது. பிராய்டின் தத்துவத்தைக் கொண்டு வேண்டுமானால் இந்த முயற்சியைச் செய்யலாம், நிற்க.

என் கதைகள் ஆரம்பமான காலத்துச் சூழ்நிலையை முதலில் சொல்லுகிறேன். சத்தியம், அஹிம்சை, இரக்கம், எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை, சாத்துவிகம், மனுஷத்தனம், நீதி, கற்பு முதலிய நூற்றுக்கணக்கான கனவுகளில் வளர்ந்த, அல்லது வளர்க்கப்பட்ட நான், அப்பொழுது ஒரு புதிய உலகைக் கண்டேன். ஏழைக் குடும்பத்தில் பிறந்த நான் சொல்லொணாத வறுமைக்கு இரையாகி, வாழ்வதற்கு வழி தேடிக்கொண்டிருந்த நாள் அது. ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் நாலாறு துறைகளில் அல்லும் பகலும் உழைத்து, உழைப்புக்குப் போதிய பாராட்டையும், வாழ்வுக்குப் போதாத ஊதியத்தையும் பெற்று நான் கதிகலங்கிக் கிடந்த காலம் அது. ஓர் அழகிய கனவிலிருந்து

அப்பொழுதுதான் விழிப்புற்று, மனிதன் என்று சொல்லப் படும் பிராணியினுடைய கோர வினைகளைக் கண்டேன். ஏராளமான தருமங்களும் தானங்களும் செய்வதாகப் பாசாங்கு செய்துகொண்டு கறுப்புச் சந்தையில் பண்டங் களை விற்ற வியாபாரிகளைக் கண்டேன்: தருமம், அதருமம்; நீதி, அநீதி; சொர்க்கம், நரகம்; கற்பு, விபசாரம் என் பவை போன்ற பழைய உண்மைகள் யாவும் இந்த உலகில் தூள் தூளாயின. ஆத்மா வேறு, உடல் வேறு; இம்மை வேறு, மறுமை வேறு; சமூகம் வேறு, தனிமனிதன் வேறு என்ற வேற்றுமைத் தளைகள் படபடவென்று அறுந்தன. மனிதனுடைய ஆசை இமயத்துக்குமேல் ஓங்கியது; அகங் காரம் பூலோக-புவர்லோக-ஸுவர்லோகங்களைக் கடந்து கடந்து மேலே எழும்பியது; 'குவி, குவி' என்ற வேட்கை, கடலாழத்தோடு போட்டியிட்டது. 'தேவர்களுக்கும் தானவர்களுக்கும் மூண்டது போர்' என்று தொடங்கும் பழங்கதைகள் யாவும் இந்தக் காலத்துக் கதைக்கு நிகரல்ல என்று தோன்றிற்று. அக்கம் பக்கத்தில் நல்ல எண்ணத் தைக் காண்பது குதிரைக் கொம்பாக இருந்தது. ஒருபுறம் லோப மோகங்கள்; மறுபுறம் பீதியும் நடுக்கமும். இப்படி இருந்த அந்தக் காலந்தான், இரண்டாவது உலகப் போர்க் காலம்.

இப்படி நீதியே தலைகவிழ்ந்துபோன காலத்திலும், நல்ல ஆத்மாக்கள் இல்லாமல் இல்லை. வாழ்வைக் கோயி லாகவும் கலையைத் தெய்வமாகவும் போற்றி வாழும் மக் கள் எந்தக் காலத்திலும் இருக்கிறார்கள். இந்த நிலையில் நான் 'கலைமகளை'ப் புகலடைந்தேன்.

இறைவனின் படைப்பிலே எல்லாப் பொருள்களும் சமமானவை; எல்லாம் பயனுடையவை. இலக்கிய உல கிலே ஆலமரங்களும் தென்னையும் பலாவும் மாவும் உண்டு; என்னைப் போன்ற புற்பூண்டுகளும் உண்டு. சமதரிசிக ளான வாசகர்கள் என்னையும் ஆதரித்தார்கள்.

## 3

என் முதல் கதை—'மழையிடையே மின்னல்'. இது 1942-ல் 'கலைமகள்'ளில் வெளிவந்தது. 'நீலமாளிகை' என்ற என் முதல் கதைத் தொகுதியில் முதல் கதையாக விளங்குகிறது. இந்தத் தொகுதிக்கு முன்னுரை அளித்த 'புதுமைப் பித்தன்', ''இவருடைய சொந்தக் கற்பனைகள் எல்லாம், முக்கால்வாசிப் பேர் திரை போட்டு மறைத்து வைக்க வேண்டியவை என்று சொல்லும் விவகாரங்களைப் பற்றி அமைந்திருக்கின்றன. அவைகளைப் பற்றி இவர் தெம்பு குன்றாமல், கை தழுதழுக்காமல் எழுதக்கூடியவர் என்பதை இவர் கதைகளே சொல்லும்'' என்று குறிப்பிட்டார்.

## 4

'மழையிடையே மின்னல்'—வெளியுலகில் மயக்கமுறும் இளைஞன் ஒருவன், தன் மனைவியின் அன்பை விளக்கமாகக் கண்ட வரலாறு அது.

எனக்கு அக்கம் பக்கத்தில் இருந்த உலகில் நான் கண்ட காட்சிகளின் சித்திரந்தான் அது. ''இவரது கதைகள் வாழ்க்கையை ஒட்டியவை; எங்கும் நிகழாதவற்றையும் நிகழ முடியாதவற்றையும் எழுதிப் படிப்பவருக்குப் போதை ஊட்டி மயக்கும் நோக்கம் ஆசிரியர்க்கு இல்லை'' என்று பேராசிரியர் மு. வ. புகன்றிருப்பது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

# 5

பி. எஸ். ராமையா

இருபத்து இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அதைப் பற்றி நினைத்துப் பார்க்கும் போது, எழும் உணர்ச்சிகள் மிக மிக விந்தையானவையாக இருக்கின்றன. அப்போது, அதாவது, 1933-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நான் முழுக்க முழுக்க எழுத்தாளனல்ல. எனக்கு எழுத வரும், நான் எழுதுவதற்கு ஒரு மதிப்பு உண்டாகும் என்பது எனக்குத் தெரியாது. அதற்கு முன், தொள்ளாயிரத்து இருபத்து நாலில் ஒரு நாவல் எழுதினேன். அந்த நாட்களில் பிரபலமாக இருந்த ரங்கராஜு, வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஆரணி குப்புசாமி முதலியார் போன்றவர்களின் வழிகளைப் பின்பற்றி ஒரு துப்பறியும் நாவல் எழுதினேன். வாழ்க்கை, மனிதன், அவனுடைய மனப் போக்குகள், உணர்ச்சிகள் ஆகியவை பற்றி ஒன்றுமே தெரியாது. அவற்றைப் பற்றிச் சிந்தித்ததும் இல்லை. இருந்தும் நான் நாவல் எழுதிவிட்டேன். அது அச்சும் ஏறிவிட்டது.

பின்னர், 1932-ல் இன்னொரு விதமான நாவல் எழுதினேன். அதில் பாதிதான் வெளிச் சரக்கு. அதாவது, நான் படித்திருந்த மண் மட்ட நாவல்களின் போலிக் கற்பனைச் சரக்குகளை மாதிரி வைத்துக் கொண்டு, எனக்குத் தானாகத் தோன்றிய கருத்துகளையும் கலந்து எழுதியது.

அதை எழுதியபோது அது புத்தகமாக வெளிவர வேண்டும், அதற்கு யாருடைய உதவியை யாவது நாடவேண்டும் என்பதுதான் என் எண்ணம். அது தொடர் கதையாகப் பத்திரிகைகளில் வெளிவர முடியும் என்பது எனக்குத் தெரியவே தெரியாது!

நான் பத்திரிகைகள் படிப்பதுண்டு. அப்போது நாட்டில் மூண்டிருந்த அறிவுத்தாகம் என்னையும் பற்றியிருந்தது. ''ஆனந்த விகடன்'' பத்திரிகையில், 'கல்கி' தமிழ் எழுத்திலும், சிந்தனையிலும் 'கியர்' மாற்றி வேகத்தை முடுக்கி விட்டுக்கொண்டிருந்த நேரம் அது. தமிழ் நாடு முழுவதின் உள்ளத்தை வளைத்துப் பிடித்துக் கொள்ளும் பேனாவை ஓட்டிக்கொண்டிருந்த 'கல்கி' என்னையும் வளைத்துப் பிடித்திருந்தார். ''விகடனை''ப் படிப்பேன். ''சுதேசமித்திரன்'' வாரப் பதிப்பும் என் சுவையைத் தூண்டிக் கொண்டிருந்தது ஓர் அளவுக்கு. இருந்தாலும், நான் எழுதிய கதையைப் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடுவார்கள் என்ற எண்ணமே எனக்குத் தோன்றவில்லை.

அந்தச் சமயம் என் அறையில் மங்களூரைச் சேர்ந்த மாதவராவ் என்ற சட்டக் கல்லூரி மாணவர் உடன் வசித்தார். அவர் வந்து என்னிடம், ''நீ எழுதிய கதையை ஏதாவது பத்திரிகையில் கொடுத்துப் பாரேன்'' என்றார். எழுதி முடித்து ஆறு மாதம் உறங்கிக்கொண்டு கிடந்த கதையை ''மித்திரன்'' காரியாலயத்திற்குக் கொண்டு போனேன். என்ன ஆச்சரியம்! சரியாக எட்டாவது நாள் அதை ''மித்திரன்'' வாரப் பதிப்பில் தொடர் கதையாக வெளியிட எடுத்துக்கொண்டு விட்டதாகச் சொன்னார்கள்!

ஆனால், அந்த அதிசயங்கூட என் உள்ளத்தில் நான் எழுத்தாளனாக முடியும் என்ற கருத்தைத் தோற்றுவிக்கவில்லை. அதன் பிறகு இரண்டு மாதங்கள் கழித்துத்தான் அது நேர்ந்தது.

அந்த ஆண்டில்தான் ''ஆனந்த விகடனி''ல் முதல் முதலாகத் தமிழில் சிறுகதைப்போட்டி நடத்தினார்கள்.

நானும் போட்டியைப் பற்றிப் படித்தேன். ஆனால் நானும் எழுத முடியும், எழுதவேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேயில்லை. அப்போது நான் "சுதந்தரச்சங்கு" காரியால யத்திற்கு அடிக்கடி போவேன் வாயாடுவேன். ஒரு நாள் சங்கு—ஸுப்ரஹ்மணியம் என்னிடம், "சும்மாப் பேசு கிறாயே? 'விகடன்' போட்டிக்குக் கதை எழுதேன்" என்றார். நான், "என்ன பிரமாதம்? எழுதுகிறேன், பாருங்கள்!" என்று சொல்லிவிட்டு வந்தேன். அவருடைய சவாலையும், என் வீறாப்பான பதிலையும் கூட மறந்து விட்டேன்.

பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி கும்பகோணம் மகா மகத்துக்குப் புறப்படுவதாக இருந்தேன். அன்று காலையில் என்னுடன் ஒரே அறையில் வசித்த கே.எஸ். ராமச்சந்திரன் (இப்போது டில்லியில் பி. டி. ஐ. நிருபராக இருப்பவர்) "சங்கு சுப்பிரமணியத்திடம் 'விகடனு'க்குக் கதை எழுதப் போவதாக வீறாப்புப் பேசிவிட்டு வந்தாயே? எப்போது எழுதப் போகிறாய்?" என்று கேட்டார். நான், "இதோ, எழுதிவிட்டே ஊருக்குப் புறப்படுகிறேன்" என்று காகி தத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட் டேன்.

சானுப்பாட்டி வளர்த்த செல்லமும், ராமதாஸும் ஒருவர் மேல் ஒருவர் ஆசை வைத்தும், அதன் பலனைப் பெற இயலாமல் இரு உள்ளங்களும் கருகியதைப் பற்றிக் கதை எழுதுவது என்று தீர்மானித்து, சானுப்பாட்டி சோறு பிசைந்து குழந்தைகளுக்குக் கையில் போடும் காட்சி யுடன் தொடங்கிவிட்டேன். என்னிடம் இயல்பாக அமைந்திருந்த கற்பனை விழித்துக் கொண்டுவிட்டது. அது காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் கண்ணெதிரில் ஓட்டிக் காட்டியது. அவற்றை நான் தாளில் இறக்கினேன். கதைக்கு "மலரும் மணமும்" என்று பெயர் வைத்து என் தம்பியிடம் கொடுத்து, "இதை 'ஆனந்த விகடன்' ஆபீசில் சேர்த்துவிடு" என்றேன். அன்றிரவு நான் கும்பகோணத் திற்கும் புறப்பட்டுவிட்டேன்.

போட்டிக்கு வந்த முன்னூறு கதைகளில், மூன்றைத் தேர்ந்தெடுத்தார்கள் பஞ்சாயத்தார். 'ராவி' எழுதிய "ஊமைச்சியின் காதல்" என்ற கதைக்கு முதல் பரிசும், "மலரும் மணமும்" என்ற என் கதைக்கும், ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் எழுதிய ஒரு கதைக்கும் இரண்டாவது பரிசும் கொடுக்கத் தீர்மானித்தார்கள். போட்டி முடிவு வெளியான 'விகட'னில் "மலரும் மணமும் என்ற கதையை எழுதியவர் பெயர், விலாசங்களை அறிவிக்கவும்" என்று கேட்டிருந்தார்கள். அனுப்பினேன்.

அதுதான் மெய்யாக என் முதல் கதை. அந்தக் கதை தான், "என்னால் எழுத முடியும், நான் எழுதவேண்டும்" என்ற எண்ணத்தை எனக்கு ஊட்டியது. இருபத்து இரண்டு ஆண்டுகளாகின்றன. இன்னும் நான் ஆண்டு தோறும் ஆயுத பூசையன்று பேனாவைத்தான் மனையில் வைத்து மலர் தூவிப் பூசித்துக் கொண்டிருக்கின்றேன்.

# 6

'ஆர்வி'

என் முதல் கதை பிறந்த வரலாறு என்ன என்று எழுதுவதில் எத்தனையோ சங்கடங்கள் உண்டு.

கங்கையும் காவிரியும் உற்பத்தியான இடங்களைப் போலவா முதல் கதை பிறந்த இடம்? இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. மலையுச்சியிலே பிறந்து பூமித் தாயின் மடியிலே தவழ்ந்து, வளர்ந்து, கடலிலே போய்க் கலப்பது போலத்தான் கதைகளின் வரலாறும். கதை உயர்ந்த இடத்திலிருந்துதான் பிறக்கிறது. சமவெளியில்தான் பாய்கிறது. கடைசியிலே இலக்கிய சாகரத்திலேதான் போய்க் கலக்கிறது. சில ஜீவநதிகளாக விளங்குகின்றன. சில பாலாறு போலத் தான். மழை வந்தால்தான் தண்ணீர்; இல்லாவிட்டால் மணல்தான்.

ஒரு சமயத்திலே, மேடான ஓரிடத்தில் நாலைந்து கிளை வழியாக ஓடிவந்த தண்ணீர் ஒன்று சேர்ந்து கொண்டது. பிறகு ஒரு மொத்தமாக ஓடிச் சென்று பள்ளத்தை நோக்கி வந்தது. அதுபோலத்தான் என் முதல் கதையும் பிறந்தது. மிக மிகச் சாதாரண விஷயம். உண்மைக்கோ உலக நடைமுறைக்கோ ஒவ்வாத, ஒட்டாத சம்பவங்களும் அல்ல. 'என்னை எழுது, என்னை எழுது' என்று அந்த

மூலக் கருப் பொருள்கள் பத்து மாதம் வளர்ந்து தானுகப் பிரசவம் ஆவதுபோல் இயற்கை அவஸ்தையோடு உதிக் கவும் இல்லை; பிறக்கவுமில்லை. பின்னே எப்படித் தோன் றிற்று?

முதல் முதல் எழுதிய ஒரு கதையோ கட்டுரையோ பிரசுரமாகும் அதிர்ஷ்டம் எல்லோருக்குமே கிடைத்து விடுவதில்லை. பத்திரிகைகளுக்கு கதை எழுதிஞல் அது திரும்பி வரும் என்பதே எனக்குத் தெரியாது! திரும்பி வரும் என்று மட்டும் எனக்கு அப்போது தெரிந்திருந்தால், நான் எழுதத் தொடங்கியிருக்கவே மாட்டேன். கல்யா ணம் என்று சொன்ஞல், அது கழுத்திலே மாலை போட்டுக் கொண்டு பெண்ணும் பிள்ளையும் கையைப் பிடித்துக் கொண்டு நலங்கு போன்ற விளையாட்டு விளையாடுவதுதான் என்று சிறு பெண்கள் நினைத்திருக்கிருர்கள். இந்தக் காலத்துச் சிறு பெண்கள் அப்படி நினைக்கிருர்களோ, என்னவோ? ஆஞல் பதினைந்து வருஷத்துக்கு முந்தி, பதிஞறு வயதான ஒரு பெண் அப்படித்தான் நினைத்தாள் என்பது எனக்குத் தெரியும். அந்தப் பெண் வேறு யாரு மல்ல; என் மனைவிதான். அவளைப் போலத்தான் கதைகள் விஷயத்திலும் நான் இருந்தேன்.

ஒரு பத்திரிகையிலே வெளியான ஒரு கதையைப் படித் தேன். மிகவும் நல்ல கதை. ஆஞல் அதைப் படித்த எனக்கு என்னவோ ஓர் ஏக்கம். அந்தக் கதையின் ஜோடனையிலே உண்மை இல்லை; கதையிலே உயிர்த்துடிப்பு இல்லை.

நம்முடைய தினசரி வாழ்க்கையிலே, நாம் அறிந்தும், அறியாமலும் எத்தனையோ இலக்கியங்களை எழுதாமலே நடத்தி வருகிரேும் என்பது பலர் அறியாத உண்மை. உண்மையில் வாழ்க்கைதான் இலக்கியம். இலக்கியம் என்பது வாழ்க்கையின் தொகுப்பு. வாழ்க்கையும் இலக் கியமும் ஒன்றுதான் என்பதை உணராத நிலையிலா நாம் இன்று இருக்கிரேும்?

நம்முடைய தினசரி வாழ்க்கையிலே நாடு, சமூகம், குடும்பம் இவற்ரோடு ஒட்டிய எத்தனையோ நிகழ்ச்சிகள் இலக்கியப் படைப்புக்குப் பொருளாகின்றன. அந்த வகையில் நாம் நம் குடும்பத்தையே முதலில் ஊன்றி, உற்று, விலகி நின்று பார்த்திருக்கிறோமா? இந்தக் கேள்வியைத் தான் அன்று என் இளநெஞ்சு அந்த உயிரற்ற உடலைப் பார்த்தபோது கேட்டதாக நான் இன்று உணர்கிறேன். விடை கிடைத்ததா? ஆம்; கிடைத்தது.

என் கண்முன்பே ஒரு பெண் நின்ருள். அவளுடைய கணவன் நின்ருன். அவர்கள் இருவரையும் ஆட்டி வைக்க வென்றே பெற்ருேர்கள், உறவினர்கள் நின்ருர்கள். ஏக்கம், ஊக்கம், உள்ளத்து உணர்ச்சிகள், மனப்பக்குவம், மனோதர்மம், அறிவு எல்லாமாகச் சேர்ந்து கொண்டு இரண்டு நாள் என்னை என்னவெல்லாமோ செய்தன.

ஒரே மூச்சாக உட்கார்ந்து, நான் நினைத்த குடும்பத்துக் கதையாக எழுதலானேன். எனக்குப் பிடித்த மாதிரிதான் அந்தப் பெண் பேசினுள். எல்லோரும் பேசினுர்கள். குடும்பமே என் இஷ்டப்படிதான் ஆடியது. 'சென்னை போ' என்ருல் போவார்கள். 'அவர்களை மட்டும் விட்டுவிட்டு வாருங்கள்' என்ருல் வருவார்கள். எனக்கு எத்தனை பெருமை! படைப்புத் தொழில் செய்பவனுடைய இறுமாப்பும் அழுத்தமும் என் நெஞ்சிலே ஏறி நின்றன.

எழுதி முடித்து, பத்திரிகைக்கும் அனுப்பி விட்டேன்.

முதல் கதையின் சுருக்கம் இதுதான்; 'புதிதாக மணமான இளந்தம்பதிகள். அவர்கள் வீட்டில் ஏக ஜனக் கும்பல். பெற்ருேர்கள் தொந்தரை வேறு. கணவனும், மனைவியும் தனித்துப் பேசிச் சிரிக்க ஒரு நிமிஷம்கூட இடைவேளை கிடைக்கவில்லை. பாவம், கடைசியில் தனிக் குடித்தனம் போகிருர்கள் பட்டணத்துக்கு. ஆனுல், அங்கு தான் அவர்கள் கனவு சிதைவுறுகிறது. புருஷனும் மனைவியும் எடுத்ததற்கெல்லாம் பூசலிடுகிருர்கள். அன்று பிரிவின்

பின் நிகழ்ந்த சந்திப்பில் தம்பதிகள் அடைந்த இன்பத்தைத் திரும்பப் பெறத் துடித்தார்கள். கடைசியில் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்புகிறார்கள்.'

அடுத்த இரண்டு வாரம்வரை கதை பற்றி ஒன்றும் காணோம். என் நெஞ்சோ வெடித்துவிடும் போலிருந்தது. அதற்குள், கதை பிடிக்காவிட்டால் கதையைத் திருப்பி விடுவார்கள் என்ற செய்தி காதில் விழுந்தது. 'அட, கஷ்டமே!' என்று இருந்தேன். ஒரு சனிக்கிழமை. 'தபால்' என்ற குரல் கேட்டு வாசலுக்கு ஓடிவந்தேன். ஒரு பக்கம் பயம், படபடப்பு, மற்றொரு பக்கம் ஏதோ ஒரு ஆசை; அசட்டுத் தைரியம்.

தபால்காரன் ஒரு பத்திரிகையைக் கொடுத்து விட்டுப் போனான். பிரித்தேன். நெஞ்சு வெடிக்கப் பிரித்தேன். என் பெயர்! என் கதையின் பெயர்! என் கதையில் வந்த பெண்ணுக்கு ஒரு படம்!

ஆசிரியர் கிடக்கட்டும்; வாசிப்பவர் கிடக்கட்டும். அந்தத் தபால்காரன் வாழ்க!

என் முதல் கதை—'தனிக் குடித்தனம்'. அதன் பிரதியைக் காணவில்லை. 39-ஆம் வருஷமோ 40-ம் வருஷமோ அது 'ஆனந்த விகட'னில் பிரசுரமாயிற்று. அது எதற்கு இப்போது? வேண்டாம்; என்னை விட்டு விடுங்கள்!

# 7



இருபத்தைந்து வருடங்கள் இருக்கும். அப்பொழுது வயது பதினாறு. மதுரையில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் முதல் கதையை எழுதி, சென்னைப் பத்திரிகை ஒன்றிற்கு அனுப்பி வைத்தேன். ஒரு வாரத்திற்குள் பத்திரிகை ஆசிரியர் அதை எனக்குத் திருப்பி அனுப்பி விட்டார். அதற்காக நான் வருத்தமோ, கவலையோ அடையவில்லை. அதே கதையை வேறொரு பத்திரிகைக்கு அனுப்பினேன். அதையும் அவர் திருப்பிவிட்டார். நானும் சளைக்காமல் அதை இன்னொரு பத்திரிகைக்குத் தள்ளிவிட்டு, மூன்றாவதற்கும் அதே கதிதான் ஏற்பட்டது. இப்படியாக ஐந்து வருடங்களில் சுமார் இருபது கதைகள் எழுதி, அவற்றைப் பல பத்திரிகைகளுக்கும் அனுப்பி, ஆசிரியர்களுடைய 'நன்றி'யுடன் திரும்பப் பெற்றுப் பத்திரமாக வைத்துக் கொண்டேன்.

என் படிப்பு முடிந்ததும் சென்னையிலுள்ள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்றில் என் சகோதரர் வேலை வாங்கிக் கொடுத்தார். காலஞ்சென்ற எழுத்தாளர் திரு. கு. ப. ராஜகோபாலன் அவர்களைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பு அங்கு சென்ற சில மாதங்களில் கிடைத்தது. தினம் நானும் அவரும் கடற்கரைக்குச் செல்வோம். அங்கே பல எழுத்தாளர்களும் வந்து கூடுவார்கள். அவர்களெல்லாம் எனக்கு

அறிமுகமானுர்கள். கு. ப. ரா. என்னைக் கதை எழுதும்படி அடிக்கடி தூண்டி வந்தார். நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு அனுப்பித் திரும்பப் பெற்ற கதைகளைப் பற்றி அவரிடம் சொல்லவில்லை. அவருடைய வற்புறுத்தலுக்கு இணங்க ஒரு நாள் சிறுவர்களுக்கான சிறுகதை ஒன்றை எழுதினேன்.

கண்ணன் என்ற சிறுவன் மிகவும் விஷமக்காரப் பையன். அவன் தாயார் எவ்வளவுதான் சொன்னுலும் அவன் கேட்பதே இல்லை. வீட்டிலிருக்கும் சாமான்களையெல்லாம் அடித்து உடைத்து நொறுக்கி விடுகிருன். தன் பையனின் இம்சை பொறுக்க முடியாத தாய், அவனைப் பயமுறுத்துவதற்காக அவன் கண்களில் வெங்காயத்தைப் பிழிந்து விடுகிருள். நாள் முழுதும் அழுது துடிக்கிருன் பையன். மாலையில் அவன் தந்தை வந்ததும் விஷயத்தைத் தெரிந்து பையனைக் கூப்பிட்டுச் சமாதானம் செய்து, கண்களைக் கழுவி, ஊதிவிட்டு, கண்ணைத் திறக்கச் சொல்கிருர். பையனும் கண்ணைத் திறக்கிருன்.

ஆனுல், என்ன பரிதாபம்! கண்பார்வையை இழந்து விட்டான். "கண் தெரியவில்லையே..." என்று கதறுகிருன். தாயாருக்கு அது ஆச்சரியத்தையும் திகிலையும் உண்டாக்குகிறது. அதற்கு முன் எத்தனையோ குழந்தைகளுக்கு அவ்விதம் செய்து ஒரு விபரீதமும் ஏற்பட்டதில்லை. மேலும், கண்ணில் வெங்காயம் பிழிவது ஒரு வகையில் குளிர்ச்சியளிக்கும் என்று கேள்விப்பட்டுமிருந்தாள். தன் பையனின் கண்களைத் தானே அவித்துவிட்ட தாயின் மனம் என்ன பாடு படும்? அவளும் அவனேடு சேர்ந்து அழுது துடிக்கிருள். உடனே தந்தை, டாக்டரிடம் ஓடுகிருர். டாக்டர், பையனின் கண்களைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, வெங்காயம் ஏதோ ஒருவகை விஷவெங்காயமாய் இருந்திருக்க வேண்டுமென்றும், ஒரு வாரத்தில் குணமாகி விடுமென்று மருந்து போடுகிருர். அதன்படியே பையனுக்கும் கண்பார்வை மீண்டும் கிடைத்து விடுகிறது. அன்று முதல் பையனும்

திருந்தி விடுகிறான். பெற்றோர்களுக்கும் அவனிடம் என்று மில்லாத பிரியம் ஏற்படுகிறது. "கண் இழந்த கண்ணன்" என்ற இக்கதை 1936-ஆம் வருஷம் 'சுதேசமித்திரன் வாரப் பதிப்'பில் சிறுவர் பகுதியில் வெளியானது.

கதை சாதாரணமாக இருந்தாலும், அதில் தாயின் மனத் துடிப்பு மற்றவர்களின் மனத்தையும் உருக்குவதாக இருந்ததால், அது பத்திரிகையில் இடம் பெற்றது என்று நினைக்கிறேன். அதோடு எனக்குச் சன்மானமும் மூன்று ரூபாய் கிடைத்தது. இருபது வருடங்களுக்கு முன் அந்தச் சிறிய தொகை கிடைத்ததில் ஆச்சரியமில்லை.

உடனே நான் பத்திரிகையை எடுத்துக்கொண்டு போய் கு. ப. ரா.விடம் காட்டினேன். நான் கதை அனுப்பியதை அவரிடம் ஏற்கனவே சொல்லாததால் அவருக்கு ஆச்சரியமாகவே இருந்தது. "பேஷ், என்னுடைய முதல் கதையும் சுதேசமித்திரனில்தான் வெளியாகியது. உங்கள் முதல் கதையும் அதே பத்திரிகையில் வந்திருக்கிறது. என்னைப்போல் நீங்களும் பெயர் எடுக்கவேண்டும். மேலும் மேலும் எழுதுங்கள்," என்று ஆசீர்வதித்து உற்சாகப் படுத்தினார்.

பல இளம் எழுத்தாளர்கள் கதைகளை எழுதிக்கொண்டு வந்து அவரிடம் காட்டுவார்கள். அவற்றை யெல்லாம் அவர் பொறுமையாகப் படித்துப் பார்த்து, சில திருத்தங் கள் சொல்வார்.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கையில், அனுப் பித் திரும்பி வந்த கதைகளையே சில திருத்தங்களுடனும், தலைப்புக்களை மாற்றியும் பல பத்திரிகைகளுக்கு அனுப்பி னேன். அவை யனைத்தும் 'மள மள' வென்று பிரசுரிக்கப் பட்டன. என் கதைகளில் அநேகமாய் கிராமியக் காட்சி களே சித்திரிக்கப் பட்டிருக்கும். அதற்குக் காரணம், நான் பத்து வயது வரைக் கிராமத்தில் வசித்ததே யாகும்.

என் முதல் கதை இருபது வருடங்களுக்கு முன் வெளியானது. இதுவரை இருநூறு கதைகளுக்கு மேல் பிரசுரமாகியிருக்கின்றன. ஆனால் எனக்குப் புகழ் அளித்தது "களத்து வாசலில்" என்ற சிறு கதைதான். 'சந்திரோதயம்' என்ற பத்திரிகையின் ஆண்டு மலரில் வெளியான அக்கதை, பின்னர் 'கதைக் கொத்து' என்ற புத்தகத்திலும் இடம் பெற்றபோது, பல தினசரிப் பத்திரிகைகள் புகழ்ந்து விமரிசனம் செய்தன. அக்கதையில் வந்த சம்பவங்கள் உண்மையாகவே நடந்தவை. அது என் மனத்தில் பத்து வருடங்களுக்குமேல் ஊறிக்கிடந்து வெளிப்பட்டதால் தான் அதற்கு அவ்வளவு சக்தியிருந்தது என்பதை உணர்ந்தேன். அம்மாதிரிக் கதைகளை எழுதிவந்த கு. ப. ராவும் அதைப் படித்து விட்டு ஆச்சரியப் பட்டார்.

ஆகவே, என் முதல் கதை "கண் இழந்த கண்ணன்" என்றாலும், புகழ்தேடித் தந்த கதை "களத்து வாசலில்" என்றே சொல்ல வேண்டும். அதனாலேயே இன்றும் பத்திரிகாசியர்கள் என்னை அம்மாதிரிக் கதைகளையே எழுத வேண்டுகிறார்கள். என்னை இந்தப் பணியில் ஊக்குவித்த அமரர் கு. ப. ரா.வை நான் மறக்கவே முடியாது.

# 8

த. நா. குமாரஸ்வாமி

என் கன்னிக் கதை, ஓர் இளங் குமரியைப் பற்றியே எழுந்தது—'ஒரு பைந்தொடிப் பாவை, ஆய்கலைப் பாவை, அருங்கலப் பாவை தமர் தொழவந்த குமரிக் கோளத் தமர் இளங் குமரி' என்று சிலப்பதிகாரம் உயர்வாகக் கூறும் தமிழகத்தின் தென் எல்லையில் நீலக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் அந்த தெய்வத்தைப் பற்றித்தான். சிறு வயதிலேயே பள்ளிப் பாடத்தைவிட எனக்குக் கதைகள் கேட்பதில்தான் அதிக ஆர்வம். இந்த நசையைப் பின்னும் கிளறி விட்டாள், என் அருமை அத்தை. அவள் தமிழ் நாடெங்கும் மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாகத் தரிசனம் செய்தவள். எத்தனையோ புராணக் கதைகள்—தேவர்களைப் பற்றிய அற்புதக் கதைகள்—மாகாத்மியங்களை எல்லாம் இரவு நேரங்களில் சொல்லுவாள். எனக்கு இனிமையான கனவுகள் வரும்.

தொடக்கத்தில் தமிழில் எனக்குப் பயிற்சியே போதாது. என் தந்தையின் விருப்பத்துக்கு இணங்கி, நான் ஸமஸ்க்ருதமே கற்றேன். காளிதாஸ், பவபூதி பாரவி, மகான் போன்றவர்களின் அருமையான பனுவல்களைப் படித்துப் படித்து இன்புறுவேன். அதே போல் காலேஜில் படிக்கும்போது ஆங்கில எழுத்தாளர்களின் இன்சுவை இலக்கியங்களை மாந்துவேன். இப்போது 'சிறு

கதை' என்று நாம் குறிக்கும் ரசனைகளை அம்மொழி வாயி லாகவே கண்டேன். எனக்கு அவை போன்ற கதைகள் வனைய துடிதுடிப்பு. என் அன்னை மொழியாகிய தமிழில் அதை உருவாக்க எனக்குப் போதிய சொற்கள் இல்லை. இந்தச் சமயத்தில் பாரதியாரின் பாட்டுக்கள் பேர் உபகார மாக நின்றன. பின்னர் சிறுசிறு காப்பியங்களைப் பாடங் கேட்டேன். அப்புறம் சிலப்பதிகாரம். ஒரு பெரிய பொற் கவாடம் என் மனத்துள் திறந்தது. என்னே தமிழின் அழகு, தமிழ்க் கற்பனையின் விரிவு, அதன் சொற் செறிவு! மயங்கினேன். சிறு வயதில் என் உள்ளத்துள் கூடு கட்டிய கற்பனை முட்டை வைத்தது. சிலப்பதிகாரத்தில் கன்னியா குமரியைப் பற்றிப் பல செய்திகள் காணலாம். தொன்மை யில் பஃறுளி ஆற்றிற்கும் குமரி ஆற்றுக்கும் இடையே எழு நூற்றுக்காவதம்—ஏழ்தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் நதி யும், பதியும் தடநீர் குமரி பெருங் கோட்டும் கடல்கொண்டு ஒழிந்தது என்ற உரைப் பகுதி—எனக்குப் பெருவியப்பைத் தந்தது.

மறைந்து போன 'லெமூரியா'வை என் அகக்கண்ணால் கண்டேன். என் கதையைத் தீட்டுவதற்குப் பரந்த பகைப் புலன் கிடைத்தது. ஆனால் என் கதையின் 'கரு' இன்னும் நன்றாகத் தரிக்கவில்லையே! பழைய தமிழகத்தையும், இந்தத் தெய்வப் பாவையையும் சேர்த்து எப்படி ஒருகதை உருவாக்குவது என்ற சிந்தனையிலேயே ஆறு மாதங்கள் சென்றன.

நான் கன்யா குமரியை நேரே சென்று கண்டதில்லை. அதன் கடற்கரை, கோயில் முகப்பு யாவும் போட்டோவில் பார்த்ததுதான். இன்றளவும் நான் குமரியைக் கண்டவ னன்று—உண்மைக் குமரியைப் பார்த்துவிட்டால் என் கற்பனைக் குமரி மங்கி விடுமோ என்றதனால்தான். கற்பனை யில் காணும் செவ்வி, உண்மை உருவங்களில் இருக்கவே

முடியாது. அந்த வசீகரமே வேறு. கன்யாமகுரி என்மானஸ சுந்தரி.

இத்தறுவாயில் எனக்குத் தெரிந்தவர் ஒருவர், கன்யா குமரிக்குப் போய்விட்டுத் திரும்பினார். அந்தத் தெய்வப் பாவையின் வண்ணப்படம் ஒன்றை அவர் எனக்குத் தந் தார். கையில் மணிமாலையும் புன்னகைக் கூட்டமான திருமுகமும் என் நயனம் விட்டு அகலவில்லை. நான் அவரைக் கேட்டேன்: "எதற்காக அம்பிகை அங்கே தவம் கிடக் கிறாள்? புராணம் என்ன சொல்லுகிறது?"

அவர் சொன்னார்: "அம்பிகை சிவபிரானைத் திருமணம் செய்துகொள்ள ஏற்பாடெல்லாம் ஆயிற்று. ஆனால் முக்கிய மான சீர்வரிசை ஒன்று வராமல் நின்று விடவே, சிவனார் சினந்து, மணத்தை முடிக்காமல் மறைந்து விட்டாராம். அவர் வருகைக்குத்தான் அம்பிகை காத்திருக்கிறாள். இந்த யுக முடிவில் மீண்டும் கடலிலிருந்து புதிய நாடுகள் தோன் றும்போது, அவர் திரும்புவாரெனச் சொல்லுகிறார்கள். தேவ ரகசியங்களை யார் அறிய முடியும்?"

ஆனால் மனிதனுடைய கற்பனை துருவிப் பாராத ரகசியங்கள் உளவோ? ஆ! கிடைத்துவிட்டது, நான் இது வரைத் தேடிய கதையின் வித்து. கொஞ்சம் கொஞ்சமாக என் கதையை எழுதினேன். மூன்று கடல்கள் அணையும் குமரிமுனை—நான் அதன் கரையிலிருந்து தொடுவானையும் 'தொடியோள் பௌத்தை'யும் நோக்குகிறேன். என்னை மறந்துவிட்டு, பழைய தமிழகத்துக்குத் தாவுகிறேன். பெயர் தெரியாத தமிழ் மன்னன் செங்கோல் ஓச்சும் நாடு. அவனுக்கு ஒரே பெண் குமரி. தாயற்ற குழந்தை. கண் ணாக வளர்க்கிறான் மன்னன். இளமையிலேயே அவள் மனம் சிவன்பால் ஒன்றி விடுகிறது. அக்கடவுளரையே மணக்க உறுதி பூண்கிறாள். மன்னன் இதைப் பிள்ளைத்தன மென்று நினைக்கிறான். யுவதி ஆகிறாள் குமரி. அப்போதும் இதே மன உறுதி. நாட்டு மக்கள் வற்புறுத்துகின்றனர் அரசனை, குமரிக்கு மணம் முடித்து விடுமாறு. அவள்

வயிற்றில் பிறக்கும் மகனே, பின்னர் அரசுரிமையைத் தாங்க வேண்டியவன்—இந்தக் கவலை அனைவர்க்கும். குமரி மறுக்கிறாள். கடைசியில் தந்தையின் சொல்லுக்கு இணங்கி, ஒரு நிபந்தனை விதிக்கிறாள். எவனொருவன் ஒரே இரவில் அரண்மனை எதிரேயுள்ள வெளியில் ஆயிரம் கோயில்களை எழுப்புவானோ அவனுக்கே தான் உரியவள்' என்ற அவளுடைய அறிக்கை உலகெங்கும் பரவுகிறது.

ரோமகம், மிசிரம், சாவகம் போன்ற இடங்களிலிருந்தும் இளவரசர்கள் வருகிறார்கள். ஆனால் எவராலும் அவளுடைய நிபந்தனையை நிறைவேற்ற முடியவில்லை. கடைசியில் வடபுலத்திலிருந்து ஆதிய புத்திரன் என்னும் மாயாவி விசித்திரக் கணங்களுடன் தமிழ்ப் பகுதிக்குக் குமரியின் கைத்தலம் பற்ற வருகிறான். சுயம்வர அவையில் குமரியைக் காண்கிறான். அவள் ஏவலைச் செய்து முடிப்பதாக உறுதி கூறுகிறான். அவனுடைய முகம், குமரியின் கற்பனையில் உலாவும் ஒரு முகத்தோடு ஒத்திருக்கிறது. அவள் நாணித் தலைகுனிகிறாள். தன் அறைக்குள் சென்று, இரவெல்லாம் கடவுளிடம் முறையிட்டுக் கொள்கிறாள், "இது நடக்குமோ? இதை நடக்க விடாமல் தடுத்து விடுங்கள்!" என்று.

பொழுது விடிந்துவிட்டது. உலகத்துக்கே தெரியாத ஒரு மாயம் நிகழ்ந்தது. மேள வாத்தியங்கள் முழங்குகின்றன. குமரி கண்ணை விழித்து, எழினியைத் திறந்து பார்க்கிறாள். அதிசயம்! வெறும் வெளியில் விண் நிவந்த கோபுரங்கள். மணமகன் வந்து கதவைத் தட்டுகிறான். குமரி அவனுடன் ஆலயங்களைக் கணக்கிடச் செல்கிறாள். ஆயிரத்துக்கு ஒன்று குறைகிறது. "இது ஏன்?" என்றதற்கு, "என்னை இன்னுமா சோதனை செய்கிறாய்? உன் கண்ணெதிரே இதோ பார், என் கடைசிக் கோயிலை" என்றவுடன் அந்த மாயாவி மறைந்து விடுகிறான். அண்டமெல்லாம் சிதறும்படி புயல் குமுறுகிறது. விரிசடை

போன்ற முகில்களிடையே அரவுபோல் மின்னல் நழுவு கின்றது.

வாளெடு கடல் சேர்ந்த பயங்கரத் தாண்டவத்தை குமரி கண் இமைக்காமல் நோக்குகிருள். தமிழகம் கடலுள் மறைகிறது. அவளைச் சுற்றிப் பாறைச் சுவர்கள் மெல்லத் தோன்றுகின்றன. அவள் கண்ணீர் விடுகிருள். அவள் கல்லாகச் சமைந்து விடுகிருள். அன்று அவள் கண்ட அதிசயக் கூத்து, இன்னும் அந்த அம்பிகையின் சிலைக் கண் ணில் தென்படுகிறது. ஆனல், 'என்றைக்குச் சிவகிருபை வருமோ?' என்று நான் கதையை முடித்து விட்டேன்.

என் நண்பர்களுக்கு இதைக் காட்டினேன். "இதைப் பத்திரிகைக்கு அனுப்பு; போட்டாலும் போடுவார்கள்" என்ருன் ஒரு நண்பன்.

"எந்தப் பத்திரிகையில்?" என்று கேட்டேன்.

"தினமணிக்கு" என்ருன்.

நண்பன் பிழைகள் திருத்தி என் கதையை 'தின மணி'க்கு அனுப்பினன். இரண்டு வாரம் பதிலே இல்லை. அப்போது நவராத்திரி. ஒரு நாள் பகலில் தபால்காரன் என்னிடம் நீள அளவில் ஒரு பத்திரிகையைத் தந்தான். கைவிரல்கள் நடுக்குறத் திறந்து பார்த்தேன்.

என் கதை! சந்தோஷக் கூச்சலிட்டேன். குதித்தேன். அடுக்களையில் வேலையாக இருந்த என் தாய், என்ன ஆபத்தோ என்று ஓடிவந்தாள். மகனுடைய அசட்டுத் தனத்தைப் பார்த்தாள்.

திரும்பி வராமல், என் கதை பத்திரிகையில் பிரசுர மாகியது என் உணர்வைக் கிண்டிவிட்டது. 'ஆனந்த விகட' னுக்கும் ஒரு கதை அனுப்பினேன். அப்போதைய அதன் ஆசிரியர் 'கல்கி, தம்மை வந்து காணுமாறு கடிதம் எழுதி யிருந்தார். போனேன். என் கதையை வியந்ததோடு, 'கன்யாகுமரி'யை ஏன் தம் பத்திரிகைக்குக் கொடுக்கவில்லை

யென்று வருத்தப்பட்டார். "நல்ல ஊதியம் கிடைக்குமே!" என்றார். கதை எழுதினால் பணம் வருமென்ற விஷயம் அதுவரை தெரியாது; கதை எழுதினால் புகழ் ஒன்றே வருமென்ற நினைப்பு எனக்கு.

இன்றையத் தமிழ் இலக்கியத்தில் எனக்கு ஓர் இடம் ஏற்படுவதற்கு இந்தக் 'கன்யா குமரி'யே காரண பூதமாக விளங்குகிறாள். இந்தக் கதையை எழுதி இருபது ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. திப்பேத்தில் லாமாவின் உன்னதமான மடாலயமான 'போதாலா'வே கன்யாகுமரியாம். அவளுடைய வழிபாடு திப்பேத்து வரை பரவியிருந்த அதிசயத்தைச் சமீபத்தில் ஓர் அமெரிக்க யாத்திரிகர் எழுதிய (*Forbidden Land*) என்ற நூலில் படித்தேன். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தென்படும் (இன்று அருகிய) 'புத்தேள் நாடு' என்பது இவ்வம்பிகையின் சக்தி பீடத்தைத்தான் குறிக்கின்றதோ?

என் கன்னி முயற்சி ஒரு மனிதப் பிறவியைப் பற்றி இராமல், கடவுளாகத் திகழும் ஒரு கன்னிகையின் புகழாக அமைந்தது என் பாக்கியம். 'கன்யா குமரி' நான் பெற்றெடுத்த தலைச்சன்; என் சீமந்த புத்திரி. அவள் வெல்க! அவள் வாழ்க! அவள் அருள் மலிந்த தமிழ் ஓங்குக!

# 9

பூவை எஸ். ஆறுமுகம்

நாள்காட்டிகள் பத்தையும், அவ்வப்போது வெளி யான ஏடுகள் நானூற்று எழுபத்தி மூன்றையும் மூடி மறைத்துக் கொண்ட தற்பெருமையில் எக்காளமிட்டுச் சிரித்துக் கொண்டிருக்கும் 'மந்திர சக்தி' தெய்வத்தால் படைக்கப்பட்ட எனக்கு இருப்பதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ள மாட்டேன்; ஆனால், மேற்சொன்ன மந்திர சக்தியை உணர்ந்து பார்த்து மகிழ்ச்சியடையும் 'தந்திர சக்தி' என்றால் படைக்கப்பெற்ற என் முதல் கதைக்கு உண்டு. ஆகவேதான், என் எழுத்துக்கள் நூல் வடிவு அடையும் தருணத்தில், மறந்துவிடாமல் என் பேனாவுக்குத் தெரிவித்துக் கொள்வது வழக்கம்.

எண்ணிப் பார்க்கின்றேன்—இன்று நேற்றல்ல; நான் பேனா பிடித்த தொடக்க நாள் தொட்டு இற்றை நாள் வரை. 'ஏன் பேனாவைக் கையிலெடுத்தேன் ?' என்ற இந்த ஒரே ஒரு கேள்விதான் என்னுடைய நெஞ்சத்தின் அடித் தளத்திலிருந்து எதிரொலி பரப்பிக் கிளம்புகிறது; ஆனால், இவ்வினாவுக்குப் பதில் தயாரிக்க என் மனச்சான்று இணங்கா விட்டாலும், அல்லது விடை சேகரிக்க வேண்டு மென்ற நியமத்தை ஒப்பாமற் போனாலும், முன் கூறப் பட்ட அக்கேள்வி எனக்கு அளவிறந்த அமைதியை—

ஆறுதலை—ஆனந்தத்தை விளைவித்துக் கொண்டுதான் இருக்கிறது.

என் வாழ்க்கையிலே இதுவரை நான் காணுத—அநுபவிக்காத அதிசயமென்றுதான் இந்த அநுபவத்திற்கு வரம்பு கட்டிக் காட்டத் தெரிகிறது. பிறைசூடியின் அருமந்தப் பிள்ளையாம் கார்த்திகை பாலனின்பக்திப் பெயருடன் இரண்டெழுத்துப் பட்டத்தையும் சுமந்து கொண்டு, நாணயங்கள் புழங்கும் பிரசித்திவாய்ந்த பாங்க் ஒன்றிலே பொழுதைக் கழித்துக்கொண்டு இருக்க வேண்டிய நான், இப்பொழுது 'வெறும்' இரண்டெழுத்துப் பெயரைத் தாங்கியவாறு, எழுத்துக்களையே நாணயமாக்கிப் பல்லாங்குழி ஆடி, 'இலக்கிய வாழ்க்கை' விளையாட்டில் 'புன்னகை'யுடன் முன்னேறி வருகின்ற இத்தகைய புதிய திரும்புமுனையை அதிசய மென்றுதானேபெயரிட்டு அழைக்க வேண்டும் ?

ஆம் ! என்னை அரைப் பைத்தியமாகவோ முழுப் பித்துக்குளியாகவோ உரு மாற்றும் புண்ணியத்தில் பங்கு பெறத் துடித்த 'விதி'யின் கண்களில் பொடி மணலைத் தூவி, என்னுள் தன்னம்பிக்கையை வளர்த்துச் செழிக்கச் செய்த பெருமையின் நூறு சதவிகிதப் பங்கையும் உரிமையாக்கிக் கொண்ட வெற்றி என் முதல் கதைக்கே உடைமை !

'எப்படி எழுத்தாளன் ஆனேன் ?'

இரண்டாவது கட்டத்தில் குரல் கொடுக்கும் புதிர்க் கேள்வி இது.

புதுக்கோட்டையில் மன்னர் கல்லூரி இடைநிலை வகுப்புக்கு எனக்கு அநுமதி தந்தபோது, பேராசிரியர் 'கல்கி' அவர்களின் 'பார்த்திபன் கனவு' என்னுடைய கண்களில் பட்டது. அப்போதே ரா. கி. அவர்களின் அருள் நோக்கு என் பேரில் விழுந்திருக்க வேண்டும். இல்லையென்ருல், பேனு பிடிக்கும் பேறு எனக்குக் கிடைத்திருக்கவே முடியாது.

இது மட்டுந்தானா ?

இப்போது, ஐ. ஏ. எஸ். பட்டம் பெற்றுள்ள உயிர் நண்பர் திரு. டி. வி. சுவாமிநாதன் அவர்களின் தூண்டுதலும் உற்சாகமும் அன்று எனக்குக் கிடைத்து வந்ததனால் தானே இன்று இந்த இரண்டெழுத்துப் பெயரை நீங்கள் நினைவு வைத்துக் கொள்ளவும் இயலுகிறது !

'தளர்ந்த நெஞ்சம் !—'

என் எழுதுகோல் கிறுக்கித் தள்ளிய முதல் மூன்று கதைகளை நானே கிழித்தெறிந்த பின்னர், நான்காவதாக ஒரு கதை எழுதி அதைப் பட்டணத்துக்கு ரயிலேற்றிவிட ஏராளமான தபால் தலைகளைத் துணைக்கும் அனுப்பும்படி ஆயிற்று. கன்னி கழிந்தவள் கருக்கொண்டு ஈரைந்து திங்கள் கழிந்தால்தான் அவள் 'தாய்ப் பதவி வகிக்க முடியும். எனக்கு அன்னை வடிவமாகக் காட்சியளித்தவள் என்னையும் 'தாய்' ஆக்கினாள், இடைநின்ற பத்து நாட்களிலும் புயலையும் பூகம்பத்தையும் ஊடாட விட்ட வண்ணம். கதையை அஞ்சலில் அனுப்பினேன்; 'அஞ்சேல். அபயம் !' என்ற நல்வாக்கும் கொடுத்தது பத்தாவது நாள் வந்த இதழொன்று. கதையை நாம் அனுப்பி வைத்தால், அவர்கள் அதை அச்சிட்டு அத்துடன் அவர்கள் செலவில் பத்திரிகையையும் அல்லவா அனுப்புகிறார்கள்? உணவு கொண்டேன்; உறக்கம் கொள்ளவில்லை. அத்துணை மகிழ்ச்சிப் பெருக்கு! காரணம், நான் புனைந்த நான்காவது சிருஷ்டி என்னுடைய முதல் கதையாக மாறியது; அச்சியற்றப் பெற்ற ஆதிக் கதை இது. இதன் பெயர்தான், 'தளர்ந்த நெஞ்சம்.' கதை வெளியான இதழ்: 'சுதேசமித்திரன் ஞாயிறு மலர்'' வெளியிட்ட ஆசிரியர்: உயர்திரு, 'சாண்டில்யன்' அவர்கள்.

கதை:

'முருகன், வள்ளி இருவரும் காதலர்கள். அவன் அவளுடைய ஆசை மச்சான்; அவள் அவனுடைய நேசக் கண்

றாட்டி!—அறிமுகப் பகுதி இது. உரியடி விளையாட்டு அவர்கள் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தது. இது என்னுடைய திட்டம். காதலர்களைக் கணவன் மனைவியாக ஆக்கிவிடலாகாது என்பது வள்ளியின் தந்தை செய்த முடிவு. தன் தகப்பனுக்கு ஓர் ஆபத்தில் உதவும்படி தன் அன்புக் காதலனுக்கு உபாய மொன்றைச் சொல்லிக் கொடுத்தாள் வள்ளி. 'முட்டுக் கட்டை'யின் மனம் இரங்குகிறது. காதலர்களின் கனவு பலிக்கிறது. புருஷன்—பெண்சாதி குழந்தை ஆகிய பிணைப்பில் உலவிய போது, பிழைப்பின் நிமித்தம் அவளும் அவனும் கூலிவேலை செய்கிறார்கள். சர்க்காரப் பாதைகளைச் செப்பனிடும் அலுவல். ஓய்வுக்காக மரத்து நிழலில் வள்ளி ஒண்டும்போது, தூங்கிவிடுகிறாள். தங்கள் திருமணத்துக்குத் தந்தை குறுக்கே நிற்பதைக் கனவில் கண்டு மனம் வேதனைப் பட்டு, தந்தையைத் திட்டி விடுகிறாள். ஆனால், கண் விழித்துப் பார்த்தபோது, அவளைக் கொண்டவன் குதூகலம் பொங்க நின்று கொண்டிருக்கிறான். தளர்ந்த நெஞ்சத்தில் நிறைவு ஏற்படுகிறது.'

சின்னஞ் சிறிய கரு.

அது கிடக்கட்டும்; இந்தச் சிறு கதைக்கு 'நிறைந்த மனம்' என்று ஏன் நான் தலைப்புச் சூட்டாமல் இருந்தேன்? எனக்கே அது விளங்கவில்லைதான். என்னவோ, 'தளர்ந்த நெஞ்சம்' என்று மகுடம் விழுந்து விட்டிருக்கிறது!...

திரு சாண்டில்யன் அவர்கள் உறையப் பயன் படும் 'கன்னி மாட'மாக என் இலக்கிய இதயம் அமைவதில் எனக்குக் கிடைக்கும் நிறைவு அதிகம்.

கதை வெளிவந்தது. பிறந்த மண்ணின் அப்போதையப் பெயரான 'பூவுற்றக்குடி'யைப் 'பூவை' எனச்சுருக்கி, அத்துடன் என் பெயரையும் இணைத்திருந்தேன். கதையும் பெயரையும் அச்சில் காணக் காண எனக்கு ஆனந்தம் நிலைகொள்ள மறுத்தது; கல்லூரி நண்பர்கள் காப்பிக்கு 'வெடி' வைத்தார்கள். லீவுக்குக் கிராமத்துக்குச் சென்ற

போது, 'நம்ப ஊர், பக்கத்து ஊர், எல்லாத்தையும் கதையிலே எழுதிட்டியே? ஆளுங்க பேரைக்கூட விடலையே?...' என்று மகிழ்ந்தார்கள். ஆயிரத்தெட்டுக் கருத்து மாறுபாடுகளுக் கிடையிலுங்கூட, என் கதைகளை விரும்பிப் படித்து, உரிய பாராட்டுக்களை யார் மூலமாவது தூதனுப்பி அமைதி கண்டு வந்த அந்த நாளைய 'நண்பர்கள்' சிலரது மானஸிகமான வேண்டுதலுக்கு இணங்கியேதான் இன்று வரை என் கதைகளிலே என் பெயரை மறந்துவிட்டாலும், என் ஊரையும் சுற்றுப்புறங்களையும் மறந்துவிடாமல் திரும்பத் திரும்ப எழுதி வருகிறேன்!

உண்மை ஒன்று :

முதல் கதையை நான் முக்கால்வாசி மறந்துவிட்ட மாதிரிதான். இப்போது எனக்கு வேறொரு நினைவு வருகிறது. 'உமா'வில் இம்மாதிரிப் பகுதியை ஏற்கெனவே தான் தொடங்கியபோது என் இலக்கிய நண்பர் ஒருவர் 'முதல் கதை வரலாறு அவ்வளவு அவசியமென நான் நம்புவது இல்லை' என்று எனக்குப் பதில் அனுப்பி யிருந்தார். அவர் வழியைப் பின்பற்றி நான் 'மறந்துவிட்ட மாதிரி' எனக் குறிப்பிடவில்லை. முதல் காதல் முதல் இரவு முதல் குழந்தை—இவ்வரிசையில் வைத்தெண்ணப்பட வேண்டியதுதான் முதல் கதை என்பது என் நம்பிக்கை.

அக்கதை பிரசுரமான ஐந்தாறு மாத இடை வெளியில் எழுதப்பட்ட நாலைந்து கதைகள் கோவையில் தோல்வி கண்டன. பட்டப் பரீட்சைக்கு ஆறு நாட்களே எஞ்சியிருந்தன. மலைக்கோட்டைப் பிள்ளையாரை நினைவில் கொண்டு, அடுத்த சிருஷ்டியைப் படைத்து அனுப்பினேன். உற்ற நண்பர்கள் சினந்தார்கள். பரீட்சை முடிந்ததும் எழுதலாகாதா என்று வேண்டினார்கள். என் இலக்கிய ஆர்வத் துடிப்பை அவர்கள் எங்ஙனம் உணர்வார்கள்?... ஆங்கிலப் பரீட்சைக்குப் படிக்க உட்கார்ந்திருந்த பொழுது, என் கதையின் நாயகியும் நாயகனும்தான் தோன்றினார்கள். பரீட்சை எழுதப் புறப்பட்ட நேரத்தில், எனக்கு

உறைக்கடிதமொன்று வந்தது. 'சிந்தையறிந்து வாடி' என்னும் என் கதை தேர்வு பெற்ற நல்ல சேதியைத் தெரிவித்திருந்தார் திரு. ஆர். திருஞானசம்பந்தம் அவர்கள். மாத இதழின் பெயர் நினைவு வரவில்லையெனில், வசந்தத்தை எண்ணிப் பாருங்கள்! இக்கதையே என்னுடைய முதற் கதையாக அமைந்திருந்தால், உண்மையிலேயே நான் பெரிதும் மனநிறைவு அடைந்திருப்பேன்!

எப்படியோ, கதையின் கனவு பிறந்துவிட்டது. ஆண்டுகள் பதினெட்டுக்கு மேலாக ஓடியும்விட்டன. இப்போது, அமைதியின் கனிவுடன் இருக்கும் நான்; பழங்கதையை மீண்டும் எண்ணிப் பார்க்கிறேன். அந்த ஒரு முதல் கதை இல்லையென்றால், என்னுடைய இத்தனை நூல்களுக்கும்! என்னுடைய இத்துணை கால உழைப்புக்கும் ஒரு பொருள் உண்டாகியிருக்காதல்லவா?

ஆம்; உண்மைதான். என் வாழ்வின் ஜீவனே அந்த என் முதற்கதையில்தான் அடக்கம்!

அத்தகையதொரு சுகமான நினைவில்தான், 'பூவையின் கதைகள்' என்ற ஓர் கதைத் தொகுப்புக்கு தமிழ்நாடு அரசாங்கம் முதற் பரிசளித்துக் கவுரவித்த ஆறுதலும் அடங்கிக் கிடக்கின்றது!...

# 10

**வேம்பு**

இந்த மண்ணுலகில் முதன் முதலில் கீழே வீழ்ந்து 'குவா குவா' என்று கத்துகிறோமே அதுவே ஒரு முதல் கதைதான்.

வாழ்க்கையில் முதல் கதை என்பது ஒரே ஒரு முறை தான் ஒவ்வொரு அநுபவத்தின்போது தோன்றும். முதன் முதலில் பள்ளிக்கூடத்தில் சேரும்போது வகுப்பறையில் நுழையும் அநுபவம். முதல்நாள் வேலையில் அமரும்போது ஏற்படும் அநுபவம்—எல்லாமே ஒரு கதைதான்.

ஆம்; கதை என்பதே ஏதோ மாயை அன்று. வாழ்க்கையில் கண்கூடாகக் காணும் காட்சியின் அழியா எழுத்துத்தான்.

'கதை ரொம்பவும் நன்ருக அமைந்து விட்டது ஸார்' என்கிருர்கள். 'நன்ருக' அமைவதற்குக் காரணம் மூலப் பொருள் ஒன்று எங்கோ இருக்க வேண்டும்.

நான் கதை எழுதினேன். எழுதுகிறேன். எழுதுவேன். முதன் முதலில் நான் எப்படிக் கதை எழுதத் தொடங்கினேன் என்பதை இப்போது உட்கார்ந்து சிந்திக்கும்போது அநுபவம் அழகிய சம்பவங்களைக் கண்முன்னே நிறுத்துகிறது. அன்று இருந்த வேகமும் உற்சாகமும் இன்று இருக்கிறதா என்று எதிர்பார்க்க நினைக்கக்கூட முடியவில்லை.

ஏனெனில் பூலோகத்தில் குழந்தை ஜனனம் போன்று உணர்ச்சி வெள்ளம் பொங்கி தடைமீறி ஓடிவருகிறதல்லவா அந்தச் சம்பவம் மறுபடியும் ஏற்படுமா? அநுபவம் தான் ஏற்படுமா?

எனக்கு மட்டுமன்று; ஒவ்வொருவருக்கும்தான் சொல்கிறேன். 'முதல் கதை' தோன்றிய கதை மறக்க முடியாத சம்பவமாகும்.

இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்பு பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போதே கதை எழுத வேண்டும் எனும் ஓர் உள்ளத் துறுதுறுப்பு ஏற்பட்டு விட்டது. பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களைப் பார்க்கும்போது 'கதை'ப் பெண்ணின் முகம் தோன்றும். நடக்கும்போது, படிக்கும்போது; உறங்கி எழும்போது—அந்தப் பெண் நல்லாள் விடாமல் இருந்துகொண்டே இருப்பாள்.

பேராசிரியர் கல்கி அவர்களின் எழுத்துக்கள் வேறு போதையை ஊட்டிவிடவே, இதயத்தில் கதை ஒலியின் சலனம் பலமாக எழ ஆரம்பித்துவிட்டது.

பள்ளி வகுப்பு: ஆங்கில வகுப்பு, உபாத்தியாயர் கதைக் கவிதை ஒன்றை விளக்கிக் கொண்டிருக்கிறார். அந்தச் சமயம் என் முதல் கதை வள்ளிக்கணவன் உதயமாகிவிட்டது. கதையை எழுதுவதற்கு ஏற்ற பக்குவமற்ற வயதுதான். ஆனால் இதயத்திற்குள் தளும்பித் தவித்து வெளியேற முயன்று கொண்டிருந்த 'கதை' அருவிக்கு இடம்—பொருள்—காலம் எல்லாம் ஒரு பொருட்டா? அன்று இரவே 'வள்ளிக் கணவனை' உருவாக்கி விட்டேன்.

சென்னையில் அப்போது நவயுவன்—மாலதி என்று இரு பத்திரிகைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. 'நவீனன்' எனும் புனைபெயரில் எழுதும் திரு பி. கே. முத்துசாமி அதன் ஆசிரியர். அவரை எனக்குத் தெரியாது அப்போது. அவருக்கும் என்னை யார் எனத் தெரியாது. யாரோ வயதான ஒருவர் கதை எழுதுகிறார் என்று எண்ணியிருக்க

லாம். 'வள்ளிக்: கணவனை'த் தபாலில் அனுப்பினேன். மறுவாரமே பிரசுரமாகி விட்டது.

அச்சில் பெயரைப் பார்க்கும்போது எழுத்தைப் பார்க்கும்போது ஏற்படும் இன்பத்தை எழுத்திலே எப்படி வடிக்க முடியும்.

'முதல்கதை'—முதல் முறையாக அச்சு வாகனம் ஏறி விட்டது. அந்தச் சம்பவத்தை இன்று நினைத்தாலும் பெருமையாகவும், தெம்பாகவும் இருக்கிறது. அதிலும் இருபத்துமூன்று வருங்களுக்கு முன்பு நடைபெற்ற நல்ல நிகழ்ச்சியை நினைக்கும்போது களிப்புக்குக் கேட்க வேண்டுமா?

# இயற்பெயர் அட்டவணை

| | புனை பெயர் | இயற் பெயர் |
|---|---|---|
| 1. | ஜெகசிற்பியன் | ஜெர்வாஸ் |
| 2. | சுகி | என். சுப்பிரமணியம் |
| 3. | வல்லிக்கண்ணன் | ரா. சு. கிருஷ்ணசாமி |
| 4. | வாசவன் | எஸ். சீனிவாசன் |
| 5. | பிலஹரி | டி. இராமன் |
| 6. | கேதாரி | எஸ். கிருஷ்ணமூர்த்தி |
| 7. | கலைப்பித்தன் | அ. சுந்தரராஜன் |
| 8. | மாறன் | கே. பி. கணபதி |
| 9. | விக்கிரமன் | சு. வேம்பு |
| 10. | ரஸவாதி | ஆர். சீனிவாசன் |
| 11. | நவீனன் | பி. கே. முத்துசாமி |
| 12. | மகரம் | K. R. கல்யாணராமன் |
| 13. | இளம்பாரதி | ருத்ர. துளஸிதாஸ் |
| 14. | சாண்டில்யன் | எஸ். பாஷ்யம் |
| 15. | மாயாவி | S. K. ராமன் |
| 16. | ஜடாதரன் | என். பாலசுப்ரமணியம் |
| 17. | பூவை | எஸ். ஆறுமுகம் |

## முதல் கதை அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | அகிலன் | ... 49 |
| 2. | கேதாரி | ... 53 |
| 3. | சுப்பிரமணியன் | ... 56 |
| 4. | கா. ஸ்ரீ. ஸ்ரீ. | ... 61 |
| 5. | பி. எஸ். ராமையா | ... 64 |
| 6. | ஆர்வி | ... 68 |
| 7. | ரா. ஆறுமுகம் | ... 72 |
| 8. | த. நா. குமாரசாமி | ... 76 |
| 9. | பூவை எஸ். ஆறுமுகம் | ... 82 |
| 10. | வேம்பு | ... 88 |

மீனாட்சி
புத்தக நிலையம்